# புதிய ஜனநாயகம்

ஆகஸ்ட் 2010
ரூ. 7.00




## நோக்கியா:

# பன்னாட்டு வர்த்தக கழக ஆட்சி!




## வறுமை:

# ஆப்பிரிக்காவை வென்றது ‘வல்லரசு’ இந்தியா!

உலகத்திலேயே கொடிய வறுமைத் தாண்டவமாடும் நாடுகளெல்லாம் ஆப்பிரிக்கக் கண்டத்தில்தான் உள்ளன என்று அனைவரும் இதுவரை எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால், ஆப்பிரிக்காவை விட ஏழைகள் மிக அதிக அளவில் இருப்பது இந்தியாவில்தான் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை இப்போது வெளிவந்துள்ளது.

ஐ.நா ஆதரவு பெற்ற ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு முயற்சி (OPHI) என்ற அமைப்பு உலகளவில் மேற்கொண்ட ஆய்வில், ஆப்பிரிக்காவில் உள்ள 26 நாடுகளைச் சேர்ந்த ஏழைகளின் மொத்த எண்ணிக்கையை விட அதிகமான ஏழைகள் இந்தியாவின் 8 மாநிலங்களில் இருப்பது தெரிய வந்துள்ளது. அந்த ஆப்பிரிக்க நாடுகளில் மொத்தம் 41 கோடி பேர் கொடிய வறுமையில் வாடுகின்றனர். இந்தியாவிலோ பீகார், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்கம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான் ஆகிய எட்டு மாநிலங்களில் மட்டும் வறுமையின் கோரப் பிடியில் உள்ளோர் 42 கோடியே 10 லட்சம் பேர்களாவர்.

வறுமையை அளவிடுவதற்கான பழைய முறைக்குப் பதிலாக, கல்வி, சுகாதாரம், தூய்மையான குடிநீர், உணவு, உடை, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் கொண்டு வறுமையை அளவிடு செய்யும் பல்பரிமாண வறுமைக் குறியீட்டு எண் (Multidimensional Poverty Index) என்ற புதிய முறையை பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐ.நா. மனிதவள மேம்பாட்டு ஆண்டு அறிக்கைக்கு இனி இந்த புதிய அளவீடைத்தான் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளனர். உலகிலேயே தெற்காசியாவில்தான் ஆப்பிரிக்காவைவிட இரு மடங்கு வறியவர்கள் உள்ளனர் என்ற உண்மையை உலகுக்கு அறிவித்துள்ளது, இந்தக் குறியீட்டு முறை.

சீனாவுடன் வல்லரசுப் போட்டியில் இருக்கும் இந்தியா, வறுமையை ஒழிக்கும் திட்டத்திலோ, களிமண் ரொட்டி தின்று உயிர்வாழும் நிலையில் தம் மக்களை வைத்துள்ள ஹெய்தி நாட்டோடு போட்டி போடும் நிலையில்தான் உள்ளது. ஏழு கோடி மக்களைக் கொண்டிருக்கும் மத்திய பிரதேசமோ, இந்தியாவுக்குள் இருக்கும் இன்னொரு காங்கோ நாடாக மாறி வருகிறது. பீகாரின் வறுமை-வளர்ச்சி விகிதம் உலகிலேயே மிக மோசமான அளவில் உள்ளது. உலகில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு ஒரிசாவின் கிராமப்புறங்களில் 43% பேரும், பீகார் கிராமப்புறங்களில் 41% பேரும் வறுமையில் உள்ளனர்.

ஏகாதிபத்தியங்களின் சூறையாடலும் கடன் கொள்ளையும் உள்நாட்டுப் போரும் வறட்சியும் ஆப்பிரிக்காவின் வறுமைக்குக் காரணமென்றால், விவசாயத்தைச் சீரழித்து வரும் உலகமயப் பொருளாதாரம் இந்தியாவின் வறுமைக்கு முதன்மைக் காரணமாக உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் மட்டும் விவசாயத்தின் சீரழிவால் வாழவழியின்றி இரண்டு லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ''கிராமத்து ஏழைக் குடும்பம் ஒன்று, ஒரு வருடத்தில் சராசரியாக உட்கொள்ளும் உணவு தானியத்தின் அளவு 10 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட, இன்று 100 கிலோ குறைவாக உள்ளது'' என்று இந்திய கிராமங்களின் வறுமையைப் பற்றி உட்சா பட்நாயக் என்ற பொருளாதார நிபுணர் கூறுகிறார். நாட்டுக்கே உணவு தந்த விவசாயிகள் இன்று சோற்றுக்கே அல்லாடுகிறார்கள். விவசாயத்தின் தோல்வியால் கோடிக்கணக்கானவர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு அத்துக் கூலிகளாகத் துரத்தப்படுகின்றனர். இதனால், இந்தியாவின் நகர்ப்புறச் சேரிகளில் மக்கள்தொகை இரு மடங்காக உயர்ந்துள்ளதை மத்திய அரசின் அறிக்கை ஒன்று உறுதி செய்கிறது.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்:10
ஆகஸ்ட் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## குண்டு வைப்புகளில் ஆர்.எஸ்.எஸ்.-இன் பங்கு:

# வெளிச்சத்துக்கு வரும் புதிய ஆதாரங்கள்

மகாராஷ்டிராவில் மாலேகான், மத்தியப் பிரதேசத்தில் அஜ்மீர், ஆந்திராவில் ஹைதராபாத் மெக்கா மசூதி, கோவாவில் மார்காவோ ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகள் இந்து மதவெறி பயங்கரவாதிகளின் கைங்கர்யம் என்ற உண்மை அம்பலமாகி, இப்பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்திய 'எழுச்சி கொண்ட இந்துக்கள்' சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்குண்டு வெடிப்புகளுக்கும் ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார அமைப்புகளுக்கும் தொடர்பில்லை எனக் காட்டிக் கொள்வதற்காக, இக்குற்றவாளிகள் தங்களைத் தனி அமைப்புகளாக - அபிநவ் பாரத், சனாதன் சன்ஸ்தான், இந்து ஜாக்ருதி சமிதி என்ற பெயர்களில் அடையாளப் படுத்திக் கொண்டனர்.

எனினும், ஹெட்லைன்ஸ் டுடே என்ற தனியார் ஆங்கிலத் தொலைக் காட்சி நிறுவனம், இக்குற்றவாளிகளுக்கும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுக்கும் இடையே நடந்த இரகசிய உரையாடல்களை ஒலி-ஒளி பரப்பியிருப்பதும்; இக்குண்டு வெடிப்புகளோடு தொடர்புடைய குற்றவாளிகள் தமக்குள் நடத்திய உரையாடல்கள் மற்றும் இக்குண்டுவெடிப்புகள் தொடர்பாக போலீசாரிடம் உள்ள சாட்சியங்களை தெகல்கா இதழ் (31 ஜூலை, 2010) வெளியிட்டிருப்பதும் இக்குண்டு வெடிப்புகளை நடத்திய குற்றவாளிகளுக்கும் ஆர்.எஸ்.எஸ் தலைவர்களுக்கும் நேரடித் தொடர்பிருப்பதையும் வேறு பல பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்துவது பற்றி அவர்கள் விவாதித்திருப்பதையும் அம்பலப்படுத்தியுள்ளன.

''ஹெட்லைன்ஸ் டுடே'' ஒளிபரப்பிய ஒளி-ஒலிப்பேழை ஒன்றில் மாலேகான் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள தயானந்த பாண்டே என்ற இந்துச் சாமியார், இந்திய இராணுவத்தில் லெப்டினென்ட் கர்னலாகப் பணியாற்றிக் கொண்டே மாலேகான் குண்டு வெடிப்பை நடத்தியவரான புரோகித், ஆர்.எஸ்.எஸ்.-இன் தீவிர ஆதரவாளரும் பா.ஜ.க.-வின் முன்னாள் கிழக்கு தில்லி நாடாளுமன்ற உறுப்பினருமான பி.எல்.சர்மா ஆகிய மூவரும் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகளில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவது பற்றி விவாதிக்கின்றனர். மற்றொரு ஒலிப்பேழையில், தயானந்த பாண்டேயும், ஆர்.பி. சிங் என்ற மருத்துவரும் துணை அரசுத் தலைவர் ஹமித் அன்சாரியைக் கொல்லும் திட்டம் பற்றி விவாதிக்கின்றனர்.

அத்தொலைக்காட்சி ஒலிபரப்பிய இன்னொரு ஒலிப்பேழையில், அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் காலஞ்சென்ற ஆர்.எஸ்.எஸ். ஊழியர் சுனில் ஜோஷி என்பவன், ஆர்.எஸ்.எஸ்.-இன் தேசியச் செயல் கமிட்டி உறுப்பினரான இந்திரேஷ் குமாரிடம் அக்குண்டு வெடிப்பு நடத்தப்பட்ட விதம் குறித்து விளக்கியுள்ளான்.

துணைக் அரசுத்தலைவரை கொல்லத் திட்டம் போட்ட ஆர்.பி.சிங்கிற்கும் விஷ்வ இந்து பரிசத் தலைவர் அசோக் சிங்காலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதையும்; மாலேகான் குண்டு வெடிப்பை நடத்திய அபிநவ் பாரத் அமைப்பிற்கும் புனேவைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ்.-இன் உயர்மட்டத் தலைவர்களுள் ஒருவரான ஷியாம் ஆப்தேவிற்கு இடையில் நெருக்கமான உறவு இருந்து வந்ததையும்; விஷ்வ இந்து பரிஷத்தின் முக்கியத் தலைவரான பிரவீன் தொகாடியா அபிநவ் பாரத் அமைப்பிற்கு ஒரு இலட்ச ரூபாய் நன்கொடை அளித்திருப்பதையும் தெகல்கா இதழ் வெளியிட்டுள்ள ஒலிப்பேழை உரையாடல்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

இவை ஒருபுறமிருக்க, இந்தியா பாகிஸ்தான் இடையே சென்றுவரும் சம்ஜௌதா விரைவுத் தொடர்வண்டியில் நடந்த குண்டுவெடிப்பு கூட இந்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலாக இருக்கும் என்றும்; சந்தீப் டாங்கே மற்றும் ராம்ஜி என்ற இரு ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களுக்கு இக்குண்டு வெடிப்பில் நேரடியாகத் தொடர்பிருக்கலாம் என்றும் போலீசார் சந்தேகிக்கின்றனர்.



ஆர்.எஸ்.எஸ்.-இன் பயங்கரவாத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியதால், இந்து மதவெறிக் குண்டர்களால் அடித்து நொறுக்கப்பட்ட ''ஹெட்லைன்ஸ் டுடே'' யின் அலுவலகம்.

அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பில் தொடர்புடைய குற்றவாளியான தேவேந்திர குப்தாவிற்கு உத்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள கான்பூர் நகர ஆர்.எஸ்.எஸ். கிளைத் தலைவரான அசோக் வார்ஷ்னேயும், ஆர்.எஸ்.எஸ். இன் தேசிய செயல் கமிட்டி உறுப்பினரான அசோக் பேரியும் தான் அடைக்கலம் கொடுத்துள்ளனர். சங்கப் பரிவார அமைப்புகளுள் ஒன்றான பஜ்ரங் தள் சட்ட விரோதமாகக் குண்டு தயாரிக்கும் வேலைகளைச் செய்து வருவது கான்பூரிலும் நான்டேட்டிலும் நடந்த குண்டு வெடிப்புகளின்போதே அம்பலமாகியிருக்கிறது.

மாலேகான் குண்டு வெடிப்பை நடத்திய கும்பல் தான் மகாராஷ்டிராவிலுள்ள ஜல்னா, பர்பானி, நான்டேட் ஆகிய இடங்களிலும் குண்டு வெடிப்புகளை நடத்தியிருப்பதும் புலனாய்வில் நிரூபணமாகியுள்ளதால், அக்கும்பல் மீதான வழக்குகளை வழக்கமான இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரிக்காமல், பொடாவுக்கு இணையான மகாராஷ்டிரா குற்றக் கும்பல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்குமாறு மும்பை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல்களில் பங்குகொண்டு அதிகாரத்தைப் பிடித்து மேலிருந்து இந்து மதவெறித் திட்டங்களை நிறைவேற்ற பா.ஜ.க.; கீழிலிருந்து இந்து மதவெறித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பஜ்ரங் தள், விஷ்வ இந்து பரிசத் போன்ற அமைப்புகளை இயக்கி வரும் ஆர்.எஸ்.எஸ்., நாடெங்கும் குண்டு வெடிப்புகளை நடத்துவதற்காகவே அபிநவ் பாரத், சனாதன் சன்ஸ்தான் போன்ற அமைப்புகளைத் தமது தலைவர்கள் மூலம் இரகசியாக இயக்கி வருகிறது என்றுதான் இவ்வுண்மைகள் மூலம் முடிவுக்கு வர முடியும்.

எனினும் கடந்த பத்தாண்டுகளாக ஆர்.எஸ்.எஸ். இன் ஆசீர்வாதத்தோடு நடந்துள்ள இக்குண்டு வெடிப்புகள் குறித்து போலீசார் ஒருங்கிணைத்த முறையில் விசாரணை நடத்த மறுக்கிறார்கள். மாலேகான் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இந்து மதவெறியர்களை விசாரணை செய்த பொழுதே, அஜ்மீர், ஹைதராபாத் குண்டு வெடிப்புகளுக்கும் இந்து மதவெறி பயங்கரவாத அமைப்புகள்தான் காரணம் என்பது அம்பலமாகிவிட்டது. ஆனாலும், மிகத் தாமதமாகத்தான் அக்குண்டு வெடிப்புகளை நடத்திய சதிகாரர்கள் கைது செய்யப்பட்டனர். அதேசமயம், இக்குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரியாகக் கருதப்படும் ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்த இராம்நாராயணன் கல்சங்கரா, சுவாமி அசிமானந்தா ஆகியோர் இன்னும் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றனர்.

அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பின் முக்கிய குற்றவாளியான னில் கோஷி மர்மமான முறையில் கொல்லப்பட்டு விட்டான். குண்டுவெடிப்பு பற்றிய உண்மைகளை மூடிமறைப்பதற்காக ஆர்.எஸ்.எஸ்.குண்டர்கள் அவனை கொன்றிருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படும் பொழுது, போலீசாரோ ''சிமி'' அமைப்புதான் அக்கொலையைச் செய்ததாகக் கூறிவருகிறார்கள்.

சம்ஜௌதா விரைவுத் தொடர்வண்டியில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணை வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகிறது. அபிநவ் பாரத் அமைப்போடு தொடர்பு வைத்துள்ள பல இராணுவ அதிகாரிகள், போலீசு அதிகாரிகள் பற்றிய விவரங்கள் புலன் விசாரணையில் அம்பலமானாலும் அவர்களுள் ஒருவர்கூட விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. குண்டு வெடிப்புகளில் ஆர்.எஸ்.எஸ்-ஐத் தொடர்புபடுத்தும் ஆதாரங்கள் கிடைத்தால், மத்தியப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பார்ப்பன அதிகார வர்க்கம் விசாரணையை அப்படியே அமுக்கிவிடுவதாக அம்பலப்படுத்தியிருக்கிறார், மகாராஷ்டிரா மாநில முன்னாள் போலீசு தலைவர் எஸ்.எம்.முஷ்ரிஃப்.

இந்திய அரசு இந்து மதவெறி பாசத்தோடுதான் இருந்து வருகிறது என்பதற்கான ஆதாரங்கள் இவை. இந்தியாவில் குண்டு வெடிப்புகளை நடத்தி வரும் முசுலீம் பயங்கரவாதிகளுக்குக் கிடைக்காத சாதகமான அம்சம் இது. ●

## உணவு தானியத்திலிருந்து சாராயம்:

# ஏழைகள் மீது ஏவிவிடப்படும் இன்னுமொரு போர்!

சாராய உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் விவசாயிகளின் வறுமையை ஒழிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது, மகாராஷ்டிர அரசு. பயிரிடப்பட்டுள்ள சோளம், கம்பு, கேழ்வரகு, காட்டுப் பருப்பு முதலானவை திடீர் மழைகளால் அழுகி விவசாயிகள் பாதிக்கப்படுவதால், சேதமடைந்த அந்த தானியங்களைக் கொள்முதல் செய்து, அதிலிருந்து சாராயம் தயாரிக்கப் போவதாவும், இத்திட்டத்தின் மூலம் வறுமையிலுள்ள சிறு விவசாயிகள் பெரிதும் பலனடைவார்கள் என்றும், விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக்கப்படும் என்றும் மகாராஷ்டிர அரசு பெருமையுடன் அறிவித்துள்ளது.

திடீர் மழையால் அழுகி வீணாகிப்போன தானியங்களிலிருந்துதான் சாராயம் தயாரிக்கிறோம் என்று மாநில அரசு கூறுவது மிகப் பெரிய மோசடி. தகவல் அறியும் சட்டப்படி கிடைத்த தகவலின்படி, அல்கோபிளஸ் என்ற சாராய ஆலை தரமான கேழ்வரகு தானியத்தை வியாபாரிகளிடமிருந்து ஒரு குவிண்டால் ரூ.810 முதல்1150 வரை கொள்முதல் செய்துள்ளது. அதாவது தரமான தானியங்கள்தான் சாராயத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனவே தவிர, மாநில அரசு கூறுவதுபோல அழுகிய தானியங்கள் அல்ல. இச்சாராய ஆலை மட்டும், கடந்த டிசம்பர் 2009-ஆம் ஆண்டு வரை 44,000 டன் தானியங்களைக் கொள்முதல் செய்துள்ளது. இப்படிப் பல ஆலைகளும் தானியங்களைக் கொள்முதல் செய்தால், கிராமப்புற ஏழைகள் அடிப்படை உணவு தானியங்கள் கிடைக்காமல் திண்டாடும் நிலைதான் ஏற்படும். மேலும், இந்த சாராய ஆலைகள் தானியங்களை வியாபாரிகளிடமிருந்துதான் வாங்கப் போகின்றனவே தவிர, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப் போவதில்லை. எனவே, இது மழையை நம்பி தானியங்களைப் பயிரிடும் ஏழை விவசாயிகளுக்குப் பலனளிக்கப் போவதில்லை.

மகாராஷ்டிராவில் தற்போது அனுமதி பெற்றுள்ள 40 சாராய ஆலைகள் ஆண்டுக்கு 46 கோடி லிட்டர் வரை சாராயத்தை உற்பத்தி செய்யும். ஒரு லிட்டர் சாராயத்தை உற்பத்தி செய்ய 2.8 கிலோ தானியம் தேவை. இதன்படி பார்த்தால், இத்தகைய சாராய ஆலைகளுக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 13 லட்சம் டன் தானியங்கள் தேவை. கடந்த 2006-07 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவில் அரிசி, கோதுமை, சோளம்,கம்பு, கேழ்வரகு முதலானவற்றின் மொத்த உற்பத்தி 101 லட்சம் டன்களாகும். இதில் 13 லட்சம் டன் தானியங்களை அதாவது, மொத்த உற்பத்தியில் 13 சதவீதத்தை சாராயத்துக்கு ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளது.

கிராமப்புற மக்களின் உணவில் பெரும் பங்கு வகிப்பவை இந்தத் தானியங்கள்தான். இதில் பற்றாக்குறை ஏற்பட்டால், சந்தையில் உணவு தானியங்களுக்குத் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்படும். ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் அதாவது, பத்து பேருக்கு ஒருவர் பருப்பும் தானியங்களும் கிடைக்காமல் பட்டினியால் பரிதவிக்க நேரிடும். மகாராஷ்டிராவில் சத்துணவின்மையால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் நோய்தாக்கி மாண்டுவரும் நிலையில், அரைகுறை புரதச் சத்துக்கான உணவு தானியங்களும் கிராமப்புற மக்களிடமிருந்து பறிக்கப்பட்டால், இளங்குழந்தைகளின் மரணங்கள் இன்னும் தீவிரமடையவே செய்யும்.

தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் எரிசாராயத்துக்கு ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் வீதம் மானியம் வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இத்தகைய மானியங்கள் மூலம் ஒவ்வொரு ஆலையும் ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் வரை ஆதாயமடைய முடியும். மைய அரசின் கனரகத் தொழில்துறை அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக்-இன் மகன், பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற துணைத் தலைவரான கோபிநாத் முண்டே-யின் மகள், முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் மருமகன்கள், முன்னாள் காதார அமைச்சர் விமல்தாய் முண்டாடா, தேசிய காங்கிரக் கட்சித் தலைவர் கோவிந்தராவ் அதிக், நவி மும்பையின் துணை மேயரான னில் சசிகாந்த் பிராஜ்தார் -இப்படி ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் உணவு தானிய சாராய ஆலைகள் மூலம் அர

உணவு தானியங்களிலிருந்து சாராயம் தயாரிக்கும் மகாராஷ்டிர அரசின் கேடுகெட்ட கொள்கையை எதிர்த்து மும்பை ஆசாத் மைதானத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்.



சின் மானியங்களையும் சலுகைகளையும் பெற்றுக் கொழுக்கின்றனர்.

மாநில உயர்நீதி மன்றமோ, அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் நீதித்துறை தலையிட முடியாது என்று பொதுநல வழக்கொன்றில் தீர்ப்பளித்துள்ளது. மேலும் சோளம், கேழ்வரகு முதலான தானியங்கள் மகாராஷ்டிர மக்களின் அடிப்படை உணவு அல்ல என்றும், சாராய ஆலைக்கு இத்தானியங்கள் ஒதுக்கப்படுவதால் அம்மாநிலத்தில் உணவுப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏதும் ஏற்படாது என்றும் திமிராகத் தீர்ப்பளித்துள்ளது.

ஆனால் மகாராஷ்டிர மாநிலத்தின் அரிசி, கோதுமை மற்றும் இதர தானியங்களின் மொத்த உற்பத்தி 101 லட்சம் டன்கள். இதில் கேழ்வரகு மட்டும் ஏறத்தாழ 37 சதவீதமாகும். இந்த அத்தியாவசியமான உணவு தானியம்கூட இனி கிராமப்புற ஏழைகளுக்குக் கிடைக்கப் போவதில்லை. இதுதவிர முந்திரி, ஜாமுன், சிக்கூ, காட்டு இலந்தை முதலானவற்றிலிருந்து சாராயம் தயாரிக்கவும் அம்மாநில அரசு முயற்சித்து வருகிறது. சாராயத்தின் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் 4,000 கோடி வருவாய் கிடைப்பதால், அதை மேலும் தீவிரமாக்குவதில்தான் அது குறியாக உள்ளது. இதன் விளைவாக அம்மாநிலம் குடிகாரர்களின் மாநிலமாக மாறிப் போகும்.

உணவு தானியங்களிலிருந்து உயிர்ம எரிபொருள் மற்றும் சாராயம் தயாரிக்கும் பெருந்தொழில் கழகங்கள், உணவுத் தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் தோற்றுவித்து பல்வேறு ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க நாடுகளைக் காலனியாக்கி வருகின்றன. அதன் வழியில் உருவாக்கப்பட்டுள்ள இக்கேடுகெட்ட மறுகாலனியக் கொள்கை மகாராஷ்டிரத்தோடு நின்று விடப்போவதில்லை. நாட்டின் இதர மாநிலங்களும் இக்கொள்கையைப் பின்பற்றி, கிராமப்புற மக்களை நிரந்தரமாகப் பட்டினியில் தள்ளும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

● குமார்

## கயர்லாஞ்சி – மேலவளவு தீர்ப்புகள்:

# நீதிமன்றங்களின் வன்கொடுமை

மகாராஷ்டிரா மாநிலம் - கயர்லாஞ்சி கிராமத்தைச் சேர்ந்த பையாலால் போட்மாங்கே குடும்பத்தினர் மீது நடத்தப்பட்ட வன்கொடுமைத் தாக்குதல் வழக்கில் குற்றம் மத்தப்பட்டிருந்த 11 பேரில் 6 பேருக்கு மரண தண்டனை, 2 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தும் மூன்று பேரை விடுதலை செய்தும் பந்தாரா மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் தீர்ப்பளித்திருந்தது. அவ்விரண்டு குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை மரண தண்டனையாக உயர்த்தக் கோரியும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வழக்கை விசாரிக்க முடியாது என மாவட்ட நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்தும் மகாராஷ்டிரா அரசால் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இம்மேல்முறையீட்டு மனுவை விசாரித்து வந்த மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளை 6 பேருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையையும் 2 பேருக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையையும் 25 ஆண்டு காலக் கடுங்காவல் தண்டனையாகக் குறைத்துத் தீர்ப்பளித்திருப்பதோடு, இவ்வழக்கை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியாது என மாவட்ட நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் உறுதி செய்திருக்கிறது.

‘‘இவ்வழக்கில் சாதிக்குப் பங்கிருப்பதாகக் கூறமுடியாது. குற்றவாளிகள் அனைவரும் சாதாரண கிராமத்து மனிதர்கள். அவர்கள் ஏற்கெனவே எந்தவொரு குற்ற நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. போட்மாங்கே குடும்பத்தினரால் தாங்கள் ஏற்கெனவே ஒரு பொய்யான வழக்கில் சிக்க வைக்கப்பட்டதற்குப் பழி தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே இக்குற்றங்களைச் செய்துள்ளனர். மேலும் இதுவொன்றும் அரிதினும் அரிதான வழக்கல்ல.’’ - இவை தண்டனையைக் குறைத்ததற்கும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வழக்கை விசாரிக்காமல் தள்ளுபடி செய்ததற்கும் உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கும் காரணங்கள்.

தாழ்த்தப்பட்ட மகர் சாதியைச் சேர்ந்த, யமரியாதையோடும் யசார்போடும் வாழ்ந்து வந்த பையாலால் போட்மாங்கேயின் மனைவி ரேகா, மகள் பிரியங்கா, மகன்கள் திர் மற்றும் ரோஷன் ஆகியோர், குன்பி என்ற ஆதிக்க சாதியைச் சேர்ந்த வெறியர்களால் ஊரே பார்க்க கொடூரமாகவும் வக்கிரமாகவும் சித்திரவதை செய்யப்பட்டு,

பையாலால் போட்மாங்கே



பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்பது உலகமே அறிந்த உண்மை.

இந்த வழக்கின் உயிர்நாடியைப் பிடுங்கிச் சாதாரண கிரிமினல் வழக்காகக் குறுக்கிய சதி மாவட்ட நீதிமன்றத்தில் அரங்கேறியது. ஆதிக்க சாதிவெறியோடு நடத்தப்பட்ட இவ்வன்கொடுமைக் கொலையை, தனிப்பட்ட நபர்களுக்கிடையேயான பகையாகவும், மோதலாகவும் சித்தரித்ததோடு, போட்மாங்கேவின் மனைவியும் மகளும் பாலியல் பலாத்காரப்படுத்தப்படவோ, மானபங்கப்படுத்தப்படவோ இல்லை என்றும் சாதித்தது மாவட்ட நீதிமன்றம். இதற்குச் சாதகமாகவே போலீசின் புலன் விசாரணையும், அரசின் வாதங்களும் அமைந்தன.

இவ்வழக்கைப் பத்தோடு பதினொன்றாக ஆக்கிய அந்நீதிமன்றம், 6 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அளித்ததுகூட நீதியின் பாற்பட்டதல்ல. ஒருபுறம், இத்தண்டனையை அளித்ததன் மூலம் தனது சாதிவெறியை மறைத்துக் கொண்டது; இன்னொருபுறமோ, ஒரு சாதாரண வழக்கிற்கு மரண தண்டனை அளித்ததை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிடும் என்று தெரிந்தே இத்தண்டனையை அளித்தது. “இதுவொன்றும் அரிதினும் அரிதான வழக்கல்ல” என உயர் நீதிமன்ற நீதிபதிகள் சொல்லியுள்ள வார்த்தைகளே இக்கூட்டுகளவாணித்தனத்தை அம்பலப்படுத்திவிட்டன.

தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக நடத்தப்படும் வன்கொடுமை வழக்குகளில் நீதிமன்றங்கள் இப்படிக் கயமைத்தனத்தோடு நடந்து கொள்வது விதிவிலக்கானதல்ல. தன்னுடைய தங்கையைக் காதல் மணம் செய்த ஈழவ சாதி இளைஞன் பிரபு, அவனது தந்தை மற்றும் பிரபுவின் வீட்டில் இருந்த இரு குழந்தைகளை வெட்டிக் கொலை செய்த தீபக் என்ற பார்ப்பன சாதிவெறியனுக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனையை ரத்து செய்த உச்ச நீதிமன்றம், “தவறானதாக இருந்தபோதிலும், இயல்பான சாதி உணர்வுக்குத்தான் தீபக் பலியாகியிருக்கிறான் எனும்போது, அவனைத் தூக்கிலிடுவது நியாயம் ஆகாது” என ஆதிக்க சாதிவெறிக்கு வக்காலத்து வாங்கியது.

“தலை இருந்தால்தானே தலைவனாக முடியும்; தலைவனாக வரும் எந்த தலித்தின் தலையும் தப்பாது” என்று பகிரங்கமாக கூறிவிட்டுத்தான் மேலவளவு பஞ்சாயத்துத் தலைவர் முருகேசனின் தலையை ஆதிக்க சாதிவெறியர்கள் அறுத்து வீசியெறிந்தனர். ஆனாலும், இவ்வழக்கை விசாரித்த சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றம் இப்படுகொலை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வராது எனத் தீர்ப்பளித்தது.

சென்னை உயர் நீதிமன்றம் மேலவளவு படுகொலை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் என வாயளவில் ஒத்துக் கொண்டாலும், சம்பவம் நடந்து ஒன்பது ஆண்டுகள் முடிந்து விட்டதைக் காட்டியும், தமிழக அர சேலம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யாததைக் காட்டியும் அவ்வழக்கை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிப்பதில் இருந்து நழுவிக் கொண்டது. திண்ணியம் வழக்கிலும் இப்படித்தான் ஆதிக்க சாதிவெறியர்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படாமல் தப்ப வைக்கப்பட்டனர்.

தமிழகத்தின் 15 மாவட்டங்களில் 1990 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு முடிய தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக 6,157 வன்கொடுமைத் தாக்குதல்கள் நடந்துள்ளதாகவும், அவற்றுள் 1,657 வழக்குகள் புலன் விசாரணை நிலையிலேயே போலீசாரால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகவும், 2,297 வழக்குகள் நீதிமன்ற விசாரணையின் போக்கில் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மீதமுள்ள 2,203 வழக்குகளில் 207 வழக்குகளில்தான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதாகவும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.



மேலவளவு முருகேசன்.

மகாராஷ்டிரா மாநிலப் புலனாய்வுப் போலீசார் வெளியிட்டுள்ள “மகாராஷ்டிராவில் குற்றங்கள் - 2007” என்ற அறிக்கையில், “வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் 2 சதவீதத்துக்கும் குறைவான வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதாக”த் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடெங்கும் இப்படி பெரும்பாலான வன்கொடுமை வழக்குகள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்படுவதற்கு, “வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் தரும் வாக்குமூலங்களை நீதிபதிகள் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள மறுப்பதை” புன்னையா கமிசன் முக்கியக் காரணமாகக் குறிப்பிட்டுள்ளது.

“தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், அதனால் அச்சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும்” என ஆதிக்க சாதிவெறியர்கள் கூச்சல் போட்டு வருகிறார்கள். அதிகார வர்க்கமும் நீதிமன்றங்களும் வழக்குப் பதிவதிலும், விசாரணை நடத்துவதிலும், தீர்ப்பு வழங்குவதிலும் இச்சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதன் மூலம் சாதி இந்துக்களின் அக்கோரிக்கையை மறைமுகமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

● குப்பன்

## நோக்கியா:

# பன்னாட்டு வர்த்தக கழக ஆட்சி!

**தி.மு.க. அரசு நோக்கியாவுக்கு கொடுத்துள்ள சலுகைகள் யாவும், தமிழகத் தொழிலாளர்களை ஒடுக்கவும், ஒட்டச் சுரண்டவுமே பயன்படுகின்றன.**

'மேட் ஃபார் இந்தியா' - இந்தியாவுக்காகவே தயாரிக்கப்பட்டது என்பது நோக்கியா கைபேசியின் விளம்பர வாசகம். ஒரு ரூபாய் அரிசி, டாஸ்மாக் சாராயம், கலைஞரின் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றுடன் இன்றைய தாராளமயத் தமிழகத்தில் தமிழனின் புதிய அடையாளமாகச் சேர்ந்திருப்பது நோக்கியா கைபேசி.

விளம்பரங்களும், ''ரிங் டோன்களும்'' நாள் முழுவதும் கசிந்து கொண்டிருக்கும் நோக்கியா கைபேசியின் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் ஆலைக்குள் கடந்த ஜூலை 23, வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நச்சுவாயு கசிந்தது. சிறீபெரும்புதூரில் உள்ள அந்த ஆலையில் மதிய உணவை முடித்துவிட்டுப் பணிக்குத் திரும்பியிருந்த முதல் ஷிப்டு தொழிலாளர்களுக்குத் திடீரென்று மூச்சுத் திணறத் தொடங்கியது. ஒரு பெண் தொழிலாளி ரத்த வாந்தி எடுத்து மயங்கி விழுந்தார். என்ன ஏதென்று பார்ப்பதற்குள் அடுத்தடுத்து ஆண்களும், பெண்களுமாகப் பல தொழிலாளர்கள் சடசடவென்று ரத்த வாந்தியுடன் மயங்கி விழ ஆரம்பித்தார்கள். ''இன்னிக்கி ஆடி மாசம் முதல் வெள்ளிக்கிழமை இல்லையா? விரதம் இருந்திருக்காங்க. பசி மயக்கம். மத்தபடி ஒண்ணுமில்ல. வேலையைப் பாருங்க...'' என்று சூபர்வைசர்கள் தொழிலாளர்களை விரட்டினர். அடுத்த சில நிமிடங்களில் ஷிப்ட் மானேஜரும், ஷிப்டுக்கான லீடரும் மயங்கி விழுந்த பின்னர்தான் நிர்வாகம் அசைந்தது. அன்று மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட தொழிலாளர்கள் 127 பேர்.

இதனையடுத்து, ''என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் வேலைக்கு வரமாட்டோம்'' என்று தொழிலாளர்கள் மறுத்தனர். ''ஆலைக்குள் ஒரு அறையில் பூச்சி மருந்து அடித்தோம். ஏ.சி. ரூம் என்பதால் மருந்து வெளியேறவில்லை. அவ்வளவுதான் பிரச்சினை'' என்று சமாளித்தது நிர்வாகம். பெரும்பாலான தொழிலாளர்கள் வரமறுத்தனர். இருப்பவர்களை வைத்து உற்பத்தியைத் தொடங்கியது நிர்வாகம். சிறிது நேரத்தில் மீண்டும் தொழிலாளர்கள் ரத்த வாந்தி எடுத்து மயங்கிவிழத் தொடங்கினர். இவர்களின் எண்ணிக்கை 145.

விஷவாயுக் கசிவால் மயங்கி விழுந்த பெண் தொழிலாளி மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறார்.



260-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டுவரப்பட்ட வண்ணமிருந்தனர். அபாய நிலையில் இருந்தவர்கள் ஐ.சி.யு-வுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மற்றவர்களுக்கு ஏதோ சிகிச்சை செய்துவிட்டு, அவசரம் அவசரமாக ''டிஸ்சார்ஜ்'' செய்து அனுப்பியது மருத்துவமனை. ''டிஸ்சார்ஜ்'' செய்யப்படும் தொழிலாளர்கள் தங்களது மருத்துவ அறிக்கையை வெளியே கொண்டுசெல்லவிடாமல் தடுப்பதில் நிர்வாகம் குறியாக இருந்தது.

தைவானைச் சேர்ந்த ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் யோக்கியதையைத் தெரிந்து கொண்டால், அதன் சென்னை நிர்வாகத்தின் இத்தகைய நடவடிக்கைகள் நமக்கு வியப்பளிக்காது. சீனாவில் உள்ள அதன் தொழிற்சாலையில் சமீபகாலத்தில் மட்டும் 10 தொழிலாளிகள் ஆலையின் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். 36 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்ய நிர்ப் பந்தித்தது, குறைவான ஊதியத்துக்குக் கசக்கிப் பிழியப்படும் கொடுமை, சூபர் வைசர்களின் கொடுங்கோன்மை போன்ற வைதான் தற்கொலைகளுக்குக் காரணம். தற்கொலை குறித்த செய்திகள் உலகம் முழுவதும் பரவி நாறிவிடவே, கவலை கொண்ட நிர்வாகம், தொழிலாளிகள் தற் கொலை செய்து கொள்வதைத் தடுக்கும் விதத்தில் மாடியிலிருந்து குதிக்க முடியாத வண்ணம், வலைத்தடுப்புகளை அமைத்தது. ஃபாக்ஸ்கான் நிர்வா கத்தின் குரூர மனத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டு போதுமானது.



''நச் வாயு கசிவிற்கான காரணம் தெரியாமல் வேலைக்கு வரமாட்டோம்''
எனக்கோரி ஆலையின் முன் போராடும் ஃபாக்ஸ்கான் தொழிலாளர்கள்.

ஃபாக்ஸ்கானின் சென்னை ஆலையில் சுமார் 6,000 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். காஞ்சிபுரம், திருத்தணி, அரக்கோணம் முதலான ஊர்களிலிருந்து தினந்தோறும் 40 கம்பெனிப் பேருந்துகள் இவர்களைக் கொண்டு வந்து கொட்டுகின்றன. நாளொன்றுக்கு 1.2 இலட்சம் நோக்கியா கைபேசிகளுக்கான உதிரிப் பாகங் களையும் தயாரித்துக் குவிக்கிறார்கள் தொழிலாளர்கள்.

''சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்சு, இந்தியா ஆகிய நாடுகளில் இயங்கும் நோக்கியா, மோடாரோலா, சாம்சங், சோனி, எல்.ஜி., போன்ற நிறுவனங்களின் ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படாததால், கடும் நோய் களை உருவாக்கக்கூடிய இரசாயனப் பொருட்களின் பாதிப்புக்கு அவர்கள் உள்ளாகி வருகிறார்கள்'' என்று கூறுகிறது பன்னாட்டு நிறுவனங்கள் குறித்த ஆய்வுக் கான மையம் (Centre for Research on Multinational Corporations) என்ற அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை.


''மின்னணுச் சாதனத் தயாரிப்பில் ஏராளமான நச்சு உலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. காரீயம், காட் மியம், டையாக்சின், ஃப்யூரான், குளோரின், புரோமின், பாலிவினைல் குளோரைடு போன்றவற்றை சூடாக்கும் போது அவை நச்சுவாயுக்களை வெளியிடுகின்றன... கைபேசி உற்பத்தியிலோ ஆர்சனிக், மெர்க்குரி போன்ற அபாயகரமான நச்சு உலோகங்கள் பயன்படுத்தப்படுகின் றன. மின்னணுச் சாதன உற்பத்தியில் நச்சு இரசாயனப் பொருட்கள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற் கான சட்டங்கள் இந்தியாவில் இல்லை'' என்று எச்ச ரிக்கிறார், கிரீன் பீஸ் அமைப்பைச் சேர்ந்த ரமாபதி குமார்.

புதிய சட்டங்களை உருவாக்குவது இருக்கட்டும். இருக்கின்ற சட்டங்களையே தம் கால்தூசுக்கு சமமாகத் தான் மதிக்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள் என்பதும் இந்த விபத்தின் மூலம் அம்பலமானது. விபத்துக்கு மறு நாள் இரவு, சுகாதாரத்துறை இணை இயக்குனர் ராஜசே கரின் உத்தரவின் பேரில் தொழிற்சாலைக்குள் ஆய்வு நடத்திய சுகாதார ஆய்வாளர்கள் 'ஒரு உண்மையை'க் கண்டறிந்தனர். ஆலையைத் துவங்குவதற்கு முன்னரே சுகாதாரத்துறையிடம் பெற்றிருக்க வேண்டிய தடையில் லாச் சான்றிதழைப் பெறாமலேயே ஃபாக்ஸ்கான் ஆலை 5 ஆண்டுகளாக உற்பத்தியை நடத்தி வந்திருக் கிறது. இந்த அதிர்ச்சியூட்டும் உண்மை வெளிவந்த பின் னரும் இது குறித்து தமிழக அரசு மூச்சு விடவில்லை. ஒருவேளை 100, 150 தொழிலாளிகள் செத்து விழுந்திருந் தாலும் தமிழக அரசு மூச்சு விட்டிருக்காது. நோக்கியா நிறுவனத்துக்குத் தமிழக அரசு வாரி வழங்கியுள்ள சலு கைகளைப் பார்ப்பவர்கள் யாரும் இதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

★★★

சிறீபெரும்புதூரில் ஒரு சிறப்புப் பொருளாதார மண் டலம் அமைப்பதற்கான ஒப்பந்தம் 2005, ஏப்ரல் 6-ஆம் தேதியன்று நோக்கியா நிறுவனத்துக்கும் தமிழக அரசுக் கும் இடையே கையெழுத்தானது. சிறப்புப் பொருளா தார மண்டலங்களுக்கு மத்திய அரசின் சட்டம் வாரி வழங்கியிருக்கின்ற சலுகைகளுக்கு மேல் பல கூடுதல் சலுகைகளை வாரி வழங்கி, நோக்கியாவைத் தமிழகத் துக்குக் கவர்ந்திழுத்தது, கலைஞர் அரசு.

ஏக்கருக்கு 4.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் சிப் காட்டுக்குச் சொந்தமான 210.87 ஏக்கர் நிலம் 99 ஆண்டு கள் குத்தகைக்கு நோக்கியாவுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதில் சிப்காட் இழந்திருக்கும் தொகை குறைந்த பட் சம் 7.4 கோடி ரூபாய். பத்திரப் பதிவுக்கான 4% முத்தி ரைத்தாள் கட்டணத்தையும் தள்ளுபடி செய்ததுடன், தனது தேவைக்குப் போக மீதமுள்ள நிலத்தைப் பிற நிறு



**நோக்கியா சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதே தமிழகத்தின் மீது கவிந்திருக்கும் ஒரு நச்சுவாயுதான் என்பதைத் தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தின் ஊடாக நிச்சயம் புரிந்து கொள்வார்கள்.**

வனங்களுக்குக் கூடுதல் விலைக்குக் குத்தகைக்கு விடுவதற்கான உரிமையையும் நோக்கியாவுக்கு வழங்கியிருக்கிறது தமிழக அரசு.

தடைபடாத மின் விநியோக உத்திரவாதம் அளிக்கப்பட்டிருப்பதுடன், ஆலைக்குத் தேவையான துணை மின்நிலையத்தையும் தனது சொந்த செலவில் மின்வாரியம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. சொந்தமாக ஒரு மின் உற்பத்தி நிலையத்தை நோக்கியா அமைத்துக் கொள்ளலாம். மின்சாரத்தை தான் விரும்பிய விலையிலும் விற்றுக் கொள்ளலாம். இதன் மீது எவ்வித வரிவிதிப்பும் இருக்காது என்பதுடன், மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான செலவில் 50 விழுக்காடையும் தமிழக அரசு கொடுக்கும். நோக்கியா சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் சாலையை அரசே அமைத்துக் கொடுப்பதுடன், அருகாமை நகரங்களிலிருந்து சிறப்புப் பேருந்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும்.

வாட் வரியாகவும், மத்திய விற்பனை வரியாகவும் ஆண்டுதோறும் நோக்கியா எவ்வளவு தொகையைச் செலுத்துகிறதோ, அந்தத் தொகையைத் தமிழக அரசு நோக்கியாவுக்குத் திருப்பிக் கொடுக்கும். அந்த வகையில் 2005 துவங்கி 4 ஆண்டுகளில் நோக்கியாவின் உள்நாட்டு விற்பனையின் அடிப்படையில் தமிழக அரசு நோக்கியாவுக்குக் கொடுத்திருக்கும் தொகை 650 கோடி ரூபாய். நோக்கியா தனது தொழிற்சாலையில் போட்டிருக்கும் முதலீடும் ஏறத்தாழ 650 கோடி ரூபாய்தான்.

தமிழக அரசு நோக்கியாவுக்கு வழங்கியுள்ள சலுகைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.1,020.4 கோடி ரூபாய். நோக்கியாவுக்கு தமிழக அரசு வழங்கியுள்ள சலுகைகள், நோக்கியா சி.பொ.மண்டலத்தில் இருக்கும் அதன் ''வெண்டார்'' (நோக்கியாவுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்கள்) நிறுவனங்களான ஃபாக்ஸ்கான் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கும் தமிழக அரசால் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும்.

மாநில அரசு வழங்கியிருக்கும் சலுகைகள் ஒருபுறமிருக்க, சி.பொ.மண்டலங்களுக்கு மைய அரசும் சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது. நோக்கியா செலுத்தவேண்டிய 20% வருமான வரி தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாக, ஆண்டுதோறும் மைய அரசுக்கு ஏற்படும் இழப்பு 700 கோடி ரூபாய். உற்பத்தியில் 50% ஏற்றுமதி செய்வதாக ஒப்புக்கொண்டிருந்த போதிலும், 70 சதவீதத்திற்கும் மேல் இந்தியச் சந்தையிலேயே விற்கப்பட்டிருப்பதனால் மத்திய அரசுக்கு ஏற்பட்ட சுங்கவரி இழப்பு ரூ.681.38 கோடி ரூபாய். கலால் வரி, சேவை வரி ஆகியவற்றிலிருந்தும் நோக்கியாவுக்கு விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது

2008-இல் நோக்கியாவில் பணிபுரிந்த தொழிலாளிகள் சுமார் 8,000 பேர். அவர்களில் சுமார் 3,000 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள். பின்லாந்து நிறுவனமான நோக்கியா, சென்னையில் ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கும் ஊதியத்தைப் போல 45 மடங்கு அதிகமான தொகையைத் தனது நாட்டின் தொழிலாளிக்கு ஊதியமாகக் கொடுக்கிறது. இத்தகைய கொடிய உழைப்புச் சுரண்டலைத் தொழிலாளிகள் எதிர்த்துப் போராடாமல் தடுக்கவும் பொறுப்பேற்றிருக்கிறது தமிழக அரசு. ''தொழிலாளர்களின் ஒழுங்கீனத்தைத் தடுக்கும் பொருட்டு, நோக்கியா சிறப்புப் பொருளாதார மண்டலத்தை பொதுப்பயனுக்கானது'' என்று அறிவிப்பதாகக் கூறியிருக்கிறது தமிழக அரசு. இச்சொற்களுக்கான பொருள் விளக்கம் தரப்படவில்லையென்றாலும், அவற்றை தி.மு.க. சங்கங்களின் கைக்கூலி நடவடிக்கைகளே விளக்குகின்றன.

அந்நியச் செலாவணி இருப்பையும், வேலைவாய்ப்பையும் பெருக்குவதற்காகவே சி.பொ.மண்டலங்களுக்குச் சலுகை வழங்குவதாகக் கூறுகிறது அரசு. சீனாவுக்கு அடுத்து உலகின் மிகப்பெரிய கைபேசி சந்தையாக வளர்ந்துவரும் இந்தியாவில் 50% சந்தையைக் கைப்பற்றுவதற்கும், படுமோசமான ஊதியத்தில் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்குமே இச்சலுகைகள் நோக்கியாவுக்குப் பயன்பட்டிருக்கின்றன. இருப்பினும் சி.பொ.மண்டலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சலுகைகளைக் குறைக்கக்கூடாது என்றும், அவை இப்போதுதான் விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியிருப்பதாகவும் சமீபத்தில் டெல்லி மாநாட்டில் பேசியிருக்கிறார் ஸ்டாலின்.

''எங்கள் நாசியில் நுழைந்த நச்சுவாயு ஏற்படுத்தும் விளைவுகளைச் சொல்'' என்று கேட்டு வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் சென்னை ஃபாக்ஸ்கான் தொழிலாளர்கள். சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதே இந்த நாட்டின் மீது கவிந்திருக்கும் ஒரு நச்சுவாயுதான் என்பதைத் தங்களது போராட்டத்தின் ஊடாக நிச்சயம் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

●சூரியன்

# வீர வணக்கம், தோழர் ஆசாத்!

மாவோயிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் ஆசாத் மற்றும் உத்தராஞ்சல் மாநிலத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஹேம் சந்திர பாண்டே ஆகியோரைச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றுவிட்டு, துப்பாக்கிச் சண்டையில் அவர்கள் கொல்லப்பட்டதாகக் கதையளந்திருக்கிறது ஆந்திர போலீசு. மாவோயிஸ்டு அமைப்பின் முக்கியமான தலைவர் ஒருவரைக் கொன்றுவிட்ட மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றது காங்கிரசு அரசு.

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அளித்த ஒப்புதலின் பேரில், மாவோயிஸ்டுகளுடன் ஒரு போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தையை சுவாமி அக்னிவேஷ் நடத்திக் கொண்டிருந்த சூழலில் நடத்தப்பட்டிருக்கிறது இந்தப் படுகொலை. போர்நிறுத்தம் தொடங்குவதற்கான தேதியை மட்டுமே முடிவு செய்யவேண்டியிருந்தது என்றும், அது தொடர்பான செய்தியை தோழர் ஆசாத்திடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருந்த சூழலில்தான் இந்தப் படுகொலை நடந்திருக்கிறது என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார் சுவாமி அக்னிவேஷ். ப.சிதம்பரத்தை நேரில் சந்தித்து, இந்தப் படுகொலை குறித்து நீதிவிசாரணை நடத்தவேண்டும் என்று கோரியதற்கு, ''அதுபற்றியெல்லாம் ஆந்திர அரசுதான் முடிவு செய்ய வேண்டும்'' என்று சிதம்பரம் மிக அலட்சியமாகப் பதிலளித்ததாகவும் கூறியிருக்கிறார் அக்னிவேஷ். ''அன்று நான் வேறு சிதம்பரத்தைப் பார்த்தேன். அவரது தோரணையே பகைமையாக இருந்தது. அவர் என் கண்ணைப் பார்த்துப் பேசுவதையே தவிர்த்தார். போர்நிறுத்தம் பற்றிய பேச்சே அவரிடமிருந்து வரவில்லை'' என்று கூறியிருக்கிறார் அக்னிவேஷ்.

இம்மாதம் டெல்லியில் நடத்தப்பட்ட நக்சல் பாதிப்புக்குள்ளான மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களின் மாநாடு, அக்னிவேஷின் ஏமாற்றத்துக்கும் சிதம்பரத்தின் அணுகுமுறைக்கும் விளக்கமளிக்கின்றது. போலீசு நிலையங்கள் நவீனமயம், சல்வா ஜூடும் போன்ற சிறப்புகாவலர் படை விரிவாக்கம், துணை இராணுவத்துக்கு ஆளெடுப்பு எனப் பல-று கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் உள்நாட்டுப் போருக்கான திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நக்சல் எதிர்ப்புப் போருக்கு மனரீதியில் தயாராகுமாறு துருப்புகளுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார் இராணுவ ஜெனரல். விமான ஓடுபாதைகளும் தளங்களும் போர்க்கால வேகத்தில் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில்தான், ''72 மணிநேரத்துக்கு மாவோயிஸ்டுகள் தமது வன்முறையை நிறுத்தினால், பன்னாட்டு நிறுவனங்களுடன் போடப்பட்டிருக்கும் எல்லா ஒப்பந்தங்கள் குறித்தும் பகிரங்கமாக விவாதிக்கத் தயாராக இருப்பதாக'' கூறினார் சிதம்பரம். இந்தச் சவடால் பேச்சும், சமாதானத் தூதும் அநீதியான இந்தப் போருக்கெதிராகக் குரல் கொடுப்போரைத் திசைதிருப்புவதற்கான சூழ்ச்சிகள் என்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. முள்ளிவாய்க்காலில் முழுவீச்சிலான இறுதிப் போரை நடத்தவதற்கு சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து திட்டம் போட்டுவிட்டு, தமிழக மக்களை ஏய்ப்பதற்காக, போர்நிறுத்தம் என்று தேர்தலுக்கு முன் நாடகமாடினாரே சிதம்பரம், அதே நாடகம்தான்; அதே சிதம்பரம்தான்.

மத்திய இந்தியாவின் கனிமவளங்களை விழுங்குவதற்குப் பசித்த மிருகங்கள் போலக் காத்திருக்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள். எந்தக் காரணத்துக்காகவும் கணநேரத் தாமதத்தைக்கூடப் பொறுத்துக் கொள்ளவோ, ஒப்பந்தங்களைக் கேள்விக்குள்ளாக்கும் மிகச் சிறிய ஆட்சேபங்களையும் சகித்துக் கொள்ளவோ அவர்கள் தயாரில்லை. மத்திய வனத்துறையின் ஆட்சேபங்களையே தூக்கிக் குப்பையில் வீசிவிட்டு, போஸ்கோவுக்கு இடம் பிடித்துக் கொடுக்க ஒரிசா அரசாங்கம் நேரடியாகக் களத்தில் இறங்கியிருக்கிறது. ''இத்தகைய அணுகுமுறை பழங்குடி மக்களை மென்மேலும் மாவோயிஸ்டுகளின் பக்கம் தள்ளுவதற்கே வழிவகுக்கும்'' என்று முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலர்

ஆந்திர போலீசாரால் போலி மோதலில் கொல்லப்பட்ட
தோழர் செம்குரி ராஜ்குமார் என்ற ஆசாத்.
(உள்படம்) தோழர் ஆசாத் (இளமைக்காலத்தில் எடுக்கப்பட்ட படம்)



விடுக்கும் கவலை தோய்ந்த எச்சரிக்கைகளையோ, விட்டில் பூச்சிகளைப்போல மாவோயிஸ்டுகளின் தோட்டாக்களுக்குப் பலியாகிவரும் துணை இராணுவப்படை சிப்பாய்கள் மத்தியில் பெருகிவரும் அதிருப்தியையோ கூடக் காதில் போட்டுக்கொள்வதற்கு மன்மோகன் அரசு தயாராக இல்லை.

மாவோயிஸ்டுகளை ஒழிப்பது என்ற ஆளும்வர்க்கத்தின் அரசியல் நோக்கம் மட்டுமே இந்தப் போரின் வேகத்தைத் தீர்மானிக்கவில்லை. அரசியல் நிர்ப்பந்தங்கள், இராணுவரீதியான தோல்விகள், மக்களின் கோபம் போன்ற எல்லாக் காரணிகளையும் புறந்தள்ளிவிட்டு, போரை மேலும் முடுக்கி முன்தள்ளுமாறு பன்னாட்டு நிறுவனங்களின் திட்டங்களும் இலாப இலக்குகளும் அரசைத் தார்க்குச்சி போட்டுத் துரத்துகின்றன. தான் அணிந்திருக்கும் ஜனநாயக வெள்ளுடை கோருகின்ற நாசூக்கு கருதி, அக்னிவேஷ் போன்றோரின் முகத்தில் விழிக்கும்போது கூடத் தனது சமாதான முகமூடியையும், பச்சைச் சிரிப்பையும் பராமரிக்க ப.சிதம்பரத்தால் முடியவில்லை. ''போலி மோதலா? நான் நீதி விசாரணை குறித்துப் பரிசீலிக்கிறேன்'' என்று ஒரு விளக்கெண்ணெய் பதிலை வெண்ணெய் போலப் பேசுவதற்குத் தெரியாதவரல்ல சிதம்பரம். அத்தகைய ஜனநாயக சம்பிரதாயங்களின் காலம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

கைது செய்து, நீதிமன்றத்தில் விசாரித்து அதன் பின்னர்தான் தண்டிக்கவேண்டும் என்ற சட்டபூர்வ வழிமுறையை, அரசியல் சட்டத்தையே மதிக்காத மாவோயிஸ்டுகள் விசயத்தில் எதற்காகப் பிரயோகிக்க வேண்டும்? அரசியல் சட்டத்தையே ஒப்புக் கொள்ளாதவனைச் சுட்டுக் கொல்வதில் என்ன தவறு? என்று பகிரங்கமாக வாதிடுகிறார்கள் பல ஆளும் வர்க்க அறிவுஜீவிகள். ''ஆயுதப் புரட்சியின் மூலம் அரசைத் தூக்கி எறிவதுதான் மாவோயிஸ்டுகளின் கொள்கை. சுரங்க ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட்டாலும், அவர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. பிறகு ஒப்பந்தங்களைப் பற்றி ஏன் பேசவேண்டும்? துப்பாக்கிதான் ஒரே தீர்வு'' என்று சிதம்பரத்தின் உள்ளக்குரலை ஒலிக்கிறது பாரதிய ஜனதாக் கட்சி.

புதிய தாராளவாதக் கொள்கைகளை முன்தள்ளும் ஊடகங்கள் உருவாக்கிவரும் பொதுக்கருத்தும் இதுதான். தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை அனுமதிக்கக் கூடாது, ஓட்டுப் போடாதவர்களுடைய உரிமையைப் பறிக்க வேண்டும் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டு வந்த கருத்துகள் முற்றி, 'அரசியல் சட்டத்தை ஏற்க மறுப்பவர்களின் ஜனநாயக உரிமைகளை மட்டுமல்ல, அவர்களது உயிர் வாழும் உரிமையையும் பறிக்கலாம்' என்று கனிந்திருக்கின்றன.

தமது வாழ்வாதாரங்கள் பறிக்கப்படுதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் பழங்குடி மக்களின் கருத்துரிமையை அங்கீகரிப்பதாக மிகுந்த பெருந்தன்மையுடன் கூறும் ஆளும் வர்க்கங்கள், தோழர் ஆசாத்தின் உயிர்வாழும் உரிமையை மூர்க்கமாக நிராகரிக்கின்றன. டாடாவும்,



போலி மோதலில் தோழர் ஆசாத்தோடு ட்டுக்கொல்லப்பட்ட பத்திரிக்கையாளர் ஹேம் சந்திர பாண்டே.

மித்தலும், போஸ்கோவும் தண்டகாரண்யாவில் கால் வைத்திருக்கவில்லையென்றாலும் இந்த அரசமைப்புக்கு எதிராக அவர் ஆயுதம் ஏந்தியிருப்பார் என்பதுதான் ஆசாத்தைக் கொல்வதற்கு ஆளும் வர்க்கம் கூறும் நியாயம். டாடாவும் மித்தலும் தண்டகாரண்யாவுக்கு விஜயம் செய்வதற்கு முந்தைய பொற்காலத்திலும், ஆளும் வர்க்கங்களின் சுரண்டலைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு அங்கம் முழுதும் ஆயுதம் தரித்துத்தான் நிற்கிறது என்ற உண்மைதான் ஆசாத்தை ஆயுதம் ஏந்த வைத்த புரட்சியின் நியாயம்.

எந்தப் 'புனிதமான' அரசியல் சட்டத்தின் பலிபீடத்தில் தோழர் ஆசாத்தின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் புனிதமான அரசியல் சட்டத்தின் மீது உலக வர்த்தகக் கழகமோ, ஒபாமாவோ, ரெட்டி சகோதரர்களோ, சல்வா ஜூடுமோ, துணை இராணுவப் படைகளோ சிறுநீர் கழிப்பதையும் காறி உமிழ்வதையும் இந்த அரசு பொருட்படுத்துவதில்லை. அவையெல்லாம் ஆளும் வர்க்கங்கள் தமது சொந்த நலனை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டு அரசியல் சட்டத்துக்கு இழைக்க வேண்டியிருக்கும் தவிர்க்க முடியாத அவமதிப்புகள். இவையெல்லாம் மறுகாலனியாக்கப் புதுயுகத்துக்குப் பொருத்தமான புதிய பூசை முறைகளாகவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. ஆனால், ஆசாத் தனது சொந்த நலன் எதையும் ஈடேற்றிக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்தவில்லை. ஒடுக்கப்படும் வர்க்கங்களின் நலனுக்காக ஆயுதம் ஏந்தினார் என்பதுதான் அவரது தலைக்கு விலை வைக்கப்படுவதற்கான காரணம். மீறல் அல்ல பிரச்சினை. அந்த மீறல் யாருடைய நலனுக்கானது என்பதுதான் பிரச்சினை. இந்தப் போரின் பொருளை இப்படியும் விளங்கிக் கொள்ளலாம். இது ஆளும் வர்க்கங்களின் நலனுக்காக அரசியல் சட்டத்தை மீறுபவர்களுக்கும்,

ஆளப்படும் வர்க்கங்களின் நலனுக்காக அரசியல் சட்டத்தை மீறுவோருக்கும் இடையிலான போர்.

கடற்படை ஒன்று போக, மற்றெல்லாப் படைகளும் தண்டகாரண்யாவைச் சுற்றி வியூகம் அமைத்துத் தாக்குதல் தொடுத்த போதிலும், ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் இந்த ஆக்கிரமிப்புப் போரை நடத்த வேண்டிய அவசியம் குறித்து இராணுவ மொழியில் உள்துறை அமைச்சர் அடிக்கடி உரையாற்றிய போதிலும், இதனை ஒரு 'உள்நாட்டுப் போர்' என்று அறிவிக்க முடியாமல் வல்லரசுப் பெருமிதம் டெல்லியைத் தடுக்கிறது.

அன்று இந்திய சமஸ்தானங்களில் கிளர்ந்தெழுந்த உள்நாட்டுப் போர்களை ஒடுக்கி, மன்னர்களைப் பாதுகாப்பதற்காக 1939-இல் பிரிட்டிஷ் அரசு உருவாக்கிய மத்திய ரிசர்வ் போலீசுப் படையும், 1965-இல் இந்திய-பாக் போரை ஒட்டி 'எல்லைப்பகுதியில் வாழும் இந்திய மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில்' உருவாக்கப்பட்ட எல்லைப் பாதுகாப்புப் படையும் இன்று ஜார்கண்டிலும், சட்டீஸ்கரிலும் முகாமிட்டிருக்கின்றன. 60 ஆண்டுகளாக மணிப்பூருக்குக் காவல் நிற்கிறது இந்திய இராணுவம். இந்திய இராணுவத்தின் 50% படைகள் காஷ்மீரில் 'அமைதியை' நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன. தற்போது, தண்டகாரண்யாவுக்கு இராணுவத்தை அனுப்புவதற்கு தளபதிகள் தயங்கக் காரணம் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இராணுவத்தை ஏவக் கூடாது என்ற தரும சிந்தனையல்ல. இந்தியர்களிடமிருந்து இந்தியாவைப் பாதுகாப்பதற்கே மொத்த இராணுவத்தையும் இறக்கிவிட்டால், அந்நியர்களிடமிருந்து இந்திய எல்லைகளைப் பாதுகாக்க ஆளில்லை என்பதுதான் அந்தத் தளபதிகள் வெளிப்படையாகக் கூற விரும்பாத உண்மை. இப்படி இந்தியப் பேரரசின் 'எல்லை', அதன் இதயப்பகுதியையே நெருங்கிவிட்டதென்ற உண்மையை ஒப்புக் கொள்வது வல்லரசுப் பெருமிதத்துக்கு வேட்டு வைத்து விடுமென்பதால், 'இது போர் அல்ல' என்று பம்மாத்து செய்கிறார் சிதம்பரம்.

உண்மையிடமிருந்து தப்புவதற்கு சுயமோசடியைக் காட்டிலும் வீரியம் செறிந்த மருந்துண்டா என்ன? கம்யூனிசம் தோற்றுவிட்டது என்பது முதலாளி வர்க்கத்தின் மூடநம்பிக்கை. அந்த நம்பிக்கை தன் கண்முன்னே பொய்த்துக் கொண்டிருப்பதால், தன்னையும் தன் நம்பிக்கையையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, 'தோற்றுப்போன' கம்யூனிசத்தைத் தோற்கடிக்கத் தவிக்கிறது முதலாளி வர்க்கம். தான் மரணத்தின் முகத்தில் விழிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு புரட்சியைக் கொல்ல முனைகிறது ஆளும் வர்க்கம்.

அக்னிவேஷின் கண்களைச் சந்திக்க முடியாமல் சிதம்பரம் முகம் திருப்பிக் கொள்ளக் காரணம் அறம் வழுவிய குற்றவுணர்வோ, நடிப்புத் திறனின்மையோ அல்ல. முயன்றாலும் வெற்றிப் பெருமிதத்தை வரவழைத்துக் கொள்ளமுடியாத அளவிற்கு சவக்களை சிதம்பரத்தின் முகத்தை ஆக்கிரமித்திருப்பதை நாடே பார்த்திருக்கும்போது, சிதம்பரம் மட்டும் பார்த்திருக்க மாட்டாரா என்ன?

எனினும், உண்மை வேறுவிதமாக இருக்க வேண்டும் என்றே சிதம்பரம் விரும்புகிறார். ஆளும் வர்க்கங்களும் அவ்வாறே விரும்புகின்றன. 20 ஆண்டுகள் போர் நடத்தி இலட்சம் பேரைக் காவு கொடுத்த பின்னரும், காஷ்மீர் மக்களின் விடுதலை உணர்வுக்குக் காரணம் பாகிஸ்தானின் தூண்டுதல்தான் என்று தீர்க்கமாக நம்புகிறது இந்திய ஆளும் வர்க்கம். கிராமங்களை எரித்து, நிலங்களைப் பிடுங்கி, பெண்களை வல்லுறவுக்கு ஆளாக்கி, இளைஞர்களைப் பிடித்துச் சென்று, விலங்குகளினும் கீழாக அமெரிக்கப் பழங்குடிகளை வேட்டையாடிய ஐரோப்பியக் காலனியாதிக்கவாதிகள், அம்மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ள முடியும் என்று ஒருபோதும் நம்பவில்லை. ஆனால், செவ்விந்திய மக்களை வேட்டையாடிய ஐரோப்பியர்களைப் போலவே, பழங்குடி மக்களை வேட்டையாடும் இந்திய ஆளும் வர்க்கமோ, மாவோயிஸ்டுகளை அகற்றிவிட்டால், தங்களது வளர்ச்சித் திட்டத்தால் பழங்குடி மக்களை வளைத்து விடமுடியும் என்று நம்புகிறது.

அதனால்தான் தோழர் ஆசாத்தின் தலைக்கும், கணபதியின் தலைக்கும் விலை. தலைகளைக் கிள்ளும் கலையில் தேர்ந்த இசுரேல் கொலைப்படைத் தலைவர்களைத் தருவித்து நக்சல் எதிர்ப்புப் படையினருக்குப் பயிற்சி. கிளியோபாட்ராவின் மூக்குதான் சாம்ராச்சியத்தின் எதிர்காலத்தைத் தீர்மானித்ததென்று கருதும் ஆய்வுமுறை வரலாற்றின் குப்பைக்குப் போய்விட்டது உண்மையேயெனினும், வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குச் செல்லக் காத்திருக்கும் வர்க்கங்களும், அவற்றுக்குத் தலைமை தாங்கும் அறிவாளிகளும் அந்த முறையில் சிந்திக்கும்படியே விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்திரா, ராஜீவ், சோனியா, ராகுல் என்று தங்களது கட்சியின் உயிர்வாழ்வுக்கே தலைகளை நம்பியிருக்கும் கும்பல், 'தலைகளைக் கிள்ளிவிட்டால் புரட்சி அழிந்துவிடும்' என்று சிந்திப்பதில் வியப்பேதுமில்லை. முன்னர் ஆசாத் என்பதை ஒரு பெயர்ச்சொல்லாகக் கருதித்தான் பிரிட்டிஷ் சாம்ராச்சியவாதிகள் அவரைப் படுகொலை செய்தனர். பின்னர் தெலிங்கானா முதல் நக்சல்பாரி வரை தேசமெங்கும் முளைத்த புரட்சிகளின் தலைகளைக் கிள்ளிக்கிள்ளி கை ஓய்ந்த பின்னரும் 'ஆசாத் என்பது வினைச்சொல்' என்ற உண்மையைப் புரிந்து கொள்ள மறுக்கிறது ஆளும் வர்க்கம்.

'தலையைக் கிள்ளினால் புரட்சியைத் தடுத்துவிடலாம்' என்ற தத்துவத்தின்படி, புரட்சியின் தலையைப் பிடிப்பதற்குத் 'தேடுதல் வேட்டை' நடத்திக் கொண்டிருக்கின்றன சிதம்பரத்தின் படைகள். 'ஆசாத்' தின் உயிர் தலையில் இல்லை என்ற ஞானம் தமது தலைகள் உருளும் தருணத்தில்தான் அவர்களது மண்டைக்குள் பளிச்சிடும் போலும். அப்படியொரு தருணம் வரமாட்டாது என்ற நம்பிக்கையில் அவர்கள் வாழட்டும். அந்தத் தருணத்தை நாம் வரவழைப்போம்.

**வீரவணக்கம், தோழர் ஆசாத்!**

● மருதையன்

## பெல்லாரி ரெட்டி சகோதரர்கள்:

# சுரங்கத் தொழில் மாஃபியாகள்

### 5,6 ஆண்டுகளில் 60,000 கோடி ரூபாய் மதிப்புடைய 71 இலட்சம் டன்கள் இரும்புக் கனிமங்களைக் கடத்திக் கொள்ளையடித்திருக்கிறார்கள் ரெட்டி சகோதரர்கள்.

இந்தியாவின் மத்திய-கிழக்கு மாநிலங்களில் நடத்தி வரும் போரான காட்டு வேட்டையின் (Operation Greenhunt) அவசியம், நோக்கம் குறித்து, சோனியா - மன்மோகன் சிங் கும்பலின் ஊதுகுழலான சிதம்பரம் சொல்லி வருவதை மீண்டும் ஒருமுறை எண்ணிப் பாருங்கள். ''நாட்டின் பழங்குடி மக்கள் அதிகமாக வாழும் அப்பிரதேசத்தை முன்னேற்றவும் அங்கு வளர்ச்சித் திட்டங்களை அமலாக்கத் தடையாகவும் உள்ள மாவோயிச நக்சல்பாரிகளை ஒழித்துக் கட்ட வேண்டும்'' என்கிறார் சிதம்பரம்.

''என்னென்ன வளர்ச்சித் திட்டங்கள்? யார் யாருக்கான வளர்ச்சித் திட்டங்கள்?'' என்று கேட்கிறார்கள், முற்போக்குப் பொருளாதார நிபுணர்கள், நாட்டுப்பற்றுடைய அறிவியல்-சுற்றுச்சூழல் அறிஞர்கள், உண்மையான மனித உரிமைப் போராளிகள், ஜனநாயக அறிவுஜீவிகள், நியாயமான பத்திரிக்கை - வானொளி செய்தியாளர்கள்.

ஒவ்வொரு நாளும் நிறையவே சண்டப்பிரசண்டம் செய்யும் சிதம்பரம் இந்தக் கேள்விகளுக்கு ஒருபோதும் பதில் சொல்வதில்லை. ஆனால், அவற்றுக்கான பதில்களை, நடைமுறை எடுத்துக்காட்டு மூலம் கர்நாடகா - ஆந்திரா எல்லையில் செய்து காட்டி வருகிறார்கள், இப்போது நாடு முழுவதும் பிரபலமாக அறியப் பட்டுவரும் ''பெல்லாரி ரெட்டி சகோதரர்கள்.''

யார் இந்த ரெட்டி சகோதரர்கள்? வெங்காய விளைச்சலில் பிரபலமான பெல்லாரி மாவட்டத்தின் தலைநகர் பெல்லாரி நகரின் போலீசு நிலையத் தலைமைக் காவலர் கெங்கா ரெட்டியின் மூன்று மகன்கள்தாம் கருணாகர ரெட்டி, ஜனார்த்தன ரெட்டி, சோமசேகர ரெட்டி. அவர்கள் வளர்ந்த போலீசுக் காலனியில் கற்றுக் கொண்ட இரண்டு பாடங்கள்: அதிகாரத்தைப் பிடிப்பதற்கு மிக முக்கிய கருவியாகிய பணம் பாதாளம் வரை பாயும்; சட்டத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை, அதை ஓய்வின்றி அலைக்கழியச் செய்து விட்டு நீ உன் வேலையைப் பார்; இந்த இரண்டு பாடங்களையும் வைத்து சிட்பண்டு, ஓட்டல், வாரப்பத்திரிகை ஆகிய தொழில்களை நடத்தி, எல்லாவற்றையும் விட முக்கியமாக இரும்புக் கனிமச் சுரங்கத் தொழிலில் வெறித்தனமாக இறங்கி, பணத்தைக் குவிப்பதற்காக பல சட்டவிரோத - மோசடி வேலைகளில் ஈடுபட்டு, ஒரு பத்தாண்டுக்குள் கர்நாடகா மாநில அரசியலிலும், பொருளாதாரத்திலும் அசைக்க முடியாத பெரும் புள்ளிகளாகி விட்டார்கள்.

பெல்லாரி ரெட்டி சகோதரர்களில் மூத்தவர் கருணாகர ரெட்டி, கர்நாடகா மாநில வருவாய்த் துறை அமைச்சர். அடுத்தவர் ஜனார்த்தன ரெட்டி - மூவரில் வில்லத்தனமான நாயகன், மாநில சுற்றுலா வளர்ச்சித் துறை அமைச்சர். மூன்றாமவர், கர்நாடகா மாநில பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைவராக உள்ள சோமசேகர ரெட்டி. மாநில மருத்துவ அமைச்சர் பி.சீறீராமுலு - இவர்களின் உடன்பிறவா சகோதரர். கர்நாடகாவின் கடந்த மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிப்பதற்கு வேண்டி ''ஆப்பரேசன் கமல்'' (தாமரை நடவடிக்கை) என்ற பெயரில் பணபலமும் ஆள்பலமும் கொடுத்து, பா.ஜ.க.வெற்றியின் சூத்திரதாரர்களாக இருந்தவர்கள் இந்த ரெட்டி சகோதரர்கள்தாம்.



எடியூரப்பாவின் (நடுவில்) முதல்வர் பதவியை மட்டுமல்ல, கர்நாடக அரசியலையே தங்களின் பணபலம்-குண்டர் பலத்தால் ஆட்டுவிக்கும் ஜனார்த்தன ரெட்டி (இடது), கருணாகர ரெட்டி (வலது).

எப்போதும் பல கர்நாடகா எம்.எல்.ஏ.க்கள் ரெட்டி சகோதரர்களின் சட்டைப் பையில் உள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு, பெல்லாரி மாவட்ட நிர்வாகத்தில் சில அதிகாரிகளை முதலமைச்சர் எடியூரப்பா மாற்றம் செய்ய முயன்றபோது, 40 எம்.எல்.ஏ.களை ஐதராபாத்துக்குக் கடத்திக் கொண்டு போனார்கள், ரெட்டி சகோ

**சுற்றுச்சூழலைப் பாதிக்காதவாறு பெல்லாரி இரும்புக் கனிம வளத்தை 30 ஆண்டுகளில் வெட்டி எடுக்கவேண்டும். ஆனால், ஆறே ஆண்டுகளில் எல்லாவற்றையும் சூறையாடிவிடும் வேகத்தில் ரெட்டி சகோதரர்கள் அக்கனிமத்தை வெட்டியெடுத்து நாடு கடத்தி வருகிறார்கள்.**

தரர்கள். எடியூரப்பா ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுத் தமது விசுவாசியை முதலமைச்சராக்கி விடப் போவதாக மிரட்டினர். சுஷ்மா, அத்வானி போன்ற பா.ஜ.க. தலைவர்கள் பேரம் பேசி எடியூரப்பாவை அடக்கி வைத்தனர். பல் பிடுங்கப்பட்ட எடியூரப்பா தன் நிலைக்காக தொலைக்காட்சியிலேயே பகிரங்கமாக கதறி அழுது விட்டார்.

பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் கர்நாடக அரசியலில் மட்டுமல்ல, ஆந்திராவிலும், பா.ஜ.க. தலைவர்களைவிட காங்கிரசின் ஆந்திர முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டியுடன் நெருக்கமானவர்கள். ராஜசேகர ரெட்டியின் மருமகனுடன் இரும்புக் கனிமச் சுரங்கத் தொழிலில் நெருங்கிய கூட்டு வைத்திருப்பவர்கள். சோனியாவுக்கு எதிராக சுஷ்மாவை நிறுத்தி பிரதமராக்க முயன்ற ரெட்டி சகோரர்கள், இப்போதும் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன்மோகன் ரெட்டியை ஆந்திர முதல்வராக்குவதற்குப் பணத்தை வாரி இறைக்கிறார்கள்.

**ரெட்டி சகோதரர்களின் துரித வளர்ச்சி!**

இரும்புக் கனிமச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு, அரசு அனுமதியுடன் இரும்புக் கனிமத்தை வெட்டியெடுத்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், இலாபம் சம்பாதிப்பதும், அதேபோல அரசியலில் ஈடுபட்டு அமைச்சர்களாவதும் செல்வாக்குப் பெறுவதும் குற்றமா? இதைத்தானே ரெட்டி சகோதரர்கள் செய்தார்கள் என்று பா.ஜ.க. வாதிடுகிறது. ''அப்பாவி''கள் பலரும் அவ்வாறே எண்ணலாம்.

ஆனால், ''2003-2004-ஆம் ஆண்டு விவரப்படி பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் வருமான வரி செலுத்த வேண்டிய அளவுக்குக்கூட வருமானம் இல்லாதவர்கள். அதன்பிறகு அவர்கள் 50,000 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்களைக் குவித்துள்ளார்கள். இந்த செல்வத்தை இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்?'' என்று கேட்கும் கர்நாடகா மேலவை உறுப்பினர் கொண்டைய்யா, அரசு சொத்துக்களைப் பயன்படுத்தி சொத்துச் சேர்த்த குற்றத்துக்காக, ஜனார்த்தன மற்றும் கருணாகர ரெட்டி சகோதரர்கள் மற்றும் அவர்களின் உடன்பிறவா சகோதரர் சிறீ ராமுலு ஆகியோரின் பதவிகளைப் பறிக்க வேண்டும் என்று மாநில ஆளுநர் மூலம் தேர்தல் ஆணையாளரிடம் மனுக் கொடுத்துள்ளார்.

ரெட்டி சகோதரர்களின் சட்டவிரோதச் செயல்கள் குறித்து மத்திய புலனாய்வு பிரிவின் விசாரணைக்குப் பரிந்துரைக்கப் போவதாக மாநில ஆளுநர் மிரட்டியிருக்கிறார். ''காங்கிரசின் எடுபிடியாகச் செயல்படும் சி.பி.ஐ. விசாரிக்கக் கூடாது, மாநில லோகாயுதா விசாரணை நடத்தும்'' என்று மாநில பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ளது. மாநில ஊழல் அதிகார முறைகேடுகளை தனிச் சிறப்பாக விசாரிப்பதற்காக உள்ள சிறப்பு ஆணையம் லோகாயுதா. தற்போது அப்பதவியில் உள்ள சந்தோஷ் ஹெக்டே, ரெட்டி சகோதரர்களின் ஊழல்-அதிகார முறைகேடுகளுக்கு எதிராகத் தாம் எடுத்த நடவடிக்கைகளுக்கு மாறாக மாநில அரசு செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, கடந்த ஜூனில் பதவி விலகல் கடிதம் கொடுத்தார். இதனால் மாநில ஆட்சியாளர்களின் குட்டு வெளிப்பட்டுப் போனதால் பதறிப்போன பா.ஜ.க. தலைமை அத்வானி மூலம் ஹெக்டேயை அணுகியது. ''மாநில அரசின் தவறுகள் திருத்தப்படும், லோகாயுதாவுக்குக் கூடுதல் அதிகாரம் தரப்படும்'' என்ற வாக்குறுதி கொடுக்கவே, ஹெக்டே பதவி விலகலை நிறுத்தி வைத்துள்ளார்.



ரெட்டி சகோதரர்களால் சூறையாடப்படும் பெல்லாரி மாவட்டத்திலுள்ள திறந்தவெளி இரும்புச் ரங்கங்கள்.



பா.ஜ.க.வின் உயர்மட்டத் தலைவர்களோடு ரெட்டி சகோதரர்களுக்கு இருக்கும் நெருக்கத்தைக் காட்டும் புகைப்படங்கள்: ஷ்மா வராஜ் (வலது படம்) மற்றும் அத்வானியோடு ஜனார்த்தன ரெட்டி (வட்டத்துக்குள்).

ஆனால், ''தனது கட்சிக்காரர்களுக்கு எதிராக காங்கிரசின் சதி'' என்ற தயார்நிலை பதிலை பா.ஜ.க. எல்லாவற்றுக்கும் தீர்வாக வைத்துக் கொண்டிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளின் வெடிகுண்டுத் தாக்குதல், குஜராத்தில் நரேந்திர மோடி தலைமையிலான இசுலாமியர் படுகொலைகள் ஆகியவற்றிலிருந்து குற்றவாளிகளைத் தப்புவிப்பதில் அக்கட்சி எவ்வளவு அக்கறை கொண்டுள்ளதோ, அதேபோல பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் விவகாரத்திலும் கடமைப்பட்டுள்ளது. ரெட்டி சகோதரர்களின் பணபலத்தைக் கொண்டு நடத்தப்பட்ட ''தாமரை நடவடிக்கை''யால் தான் பா.ஜ.க. கர்நாடகாவில் ஆட்சிக்கு வந்தது. அக்கட்சி ஆட்சியில் நீடிப்பதும் வீழ்வதும் ரெட்டி சகோதரர்களின் கை அசைவில் இருக்கிறது.

ரெட்டி சகோதரர்களின் ஊழல்-அதிகார முறைகேடுகள் அத்வானி - சுஷ்மா முதல் அனைவருக்கும் தெரியும். பெல்லாரியில் இருந்து 71 இலட்சம் டன்கள், அதாவது 60,000 கோடி ரூபாய் மதிப்புடைய இரும்பு, கனிமங்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. இதை கர்நாடகா முதல்வர் எடியூரப்பாவே மாநில சட்டப்பேரவையில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு இன்னமும் தனக்கு மேல் பொறுப்பில் இருப்பவர்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டிக் கொண்டிருக்கிறார்கள் ரெட்டி சகோதரர்கள். ஆறு ஆண்டுகளில் இவ்வளவு பெரிய இமாலய சாதனையை அவர்களால் எப்படிச் சாதிக்க முடிந்தது?

**இரும்புக் கனிமச் சுரங்கங்களா?**
**தங்கக் கனிமச் சுரங்கங்களா?**

வட கர்நாடகாவின் ஆந்திர எல்லையில் உள்ள பின்தங்கிய சிறிய மாவட்டம் பெல்லாரி. அதன் பாதிக்கும் மேலான பகுதிகள் இரும்புக் கனிமச் சுரங்கங்களைக் கொண்டது. 2008-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி -று கோடி டன்கள் இரும்புக் கனிமங்கள் அங்கே கொட்டிக் கிடக்கின்றன. அவற்றைப் பூமிக்கடியில் சுரங்கங்கள் வெட்டி, தோண்டி எடுக்க வேண்டிய சிரமம் கூட கிடையாது. பூமியின் மேல் பரப்பில் திறந்தவெளி ''சுரங்கம்'' வெட்டினால் போதும் என்கிறவாறு சிறு சிறு குன்றுகளாகக் குவிந்து கிடக்கின்றன. அதில் 60 சதவீத மானவை இரும்பு மாவைப் போன்ற உயர் ரகத்தைச் சேர்ந்தவை. சீனாவில் 2008-ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கான கட்டுமானத் தேவைகளின் காரணமாக எஃகு உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. பெல்லாரி உயர்ரக இரும்புக் கனிமத்தில் 65% இரும்பு உலோகம் கிடைப்பதால் சீனத்தில் கூடுதலான விலையும் கிடைத்தது.

இப்போதைய கணக்கின்படி, ஒரு டன்னுக்கு இரும்புக் கனிமத்துக்கு வெறும் 27 ரூபாய் மட்டும் அரசுக்குச் செலுத்திவிட்டு, ஒரு டன் இரும்பை 7000 ரூபாய்க்கு விற்று நாள் ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் வீதம் பெல்லாரி சகோதரர்கள் குவித்தார்கள். இந்திய அரசின் சுரங்கம் மற்றும் கனிமத் துறையின் கணக்கின்படி, சுற்றுச்சூழலைப் பாதிக்காதவாறு பெல்லாரி இரும்புக் கனிம வளத்தை 30 ஆண்டுகளில் வெட்டி எடுக்க வேண்டும். ஆனால், ஆறே ஆண்டுகளில் எல்லாவற்றையும் சூறையாடிவிடும் வேகத்தில் ரெட்டி சகோதரர்கள் அக்கனிமத்தை வெட்டியெடுத்து நாடு கடத்தி வருகிறார்கள். இவர்களின் இலாபவெறியில் பெல்லாரியில் இரும்புக் கனிமக் குன்றுகள் கரைந்து போகின்றன. ரெட்டி சகோதரர்களிடம் பணக் குன்றுகள் உயர்ந்து கொண்டே போகின்றன.

இதைப் பார்த்து, இரும்புக் கனிமங்கள் எங்கே கிடைக்கின்றன, எப்படி, எங்கே ஏற்றுமதி செய்வது

**குஜராத்தில் நடந்த இசுலாமியர் படுகொலை வழக்குகளிலிருந்து நரேந்திர மோடி உள்ளிட்ட குற்றவாளிகளைத் தப்புவிப்பதில் அக்கட்சி எவ்வளவு அக்கறை கொண்டுள்ளதோ, அதேபோல பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் விவகாரத்திலும் கடமைப்பட்டுள்ளது.**

**2003-2004-ஆம் ஆண்டு விவரப்படி பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் வருமான வரி செலுத்தவேண்டிய அளவுக்குக்கூட வருமானம் இல்லாதவர்கள். அதன்பிறகு அவர்கள் 50,000 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்களைக் குவித்துள்ளார்கள்.**

என்று கூட அறியாத திடீர் பணக்காரக் கொள்ளைக் கூட்டம் குத்தகை கேட்டு அரசிடம் சாரிசாரியாகப் படையெடுத்தது. பெல்லாரி மாவட்டத்தின் ஹோஸ்பட் அல்லது சந்தூர் வட்டத்தின் ஏதாவது வரைபடத்தையும் ஒரு கிராமத்தின் பெயரையும் கொடுத்து, ஏதாவது ஒரு எல்லையைக் குறிப்பிட்டு குத்தகைக்கு அரசிடம் விண்ணப்பித்தார்கள். அதைச் சோதித்தறியும் தகுதியுடைய அதிகாரிகள் மத்திய, மாநில அரசிடம் கிடையாது. இலஞ்சம் வாங்கிக் கொண்டு மானாவாரியாக குத்தகை உரிமம் கொடுத்தார்கள். இப்படி ஒரு குறுகிய காலத்தில் *158* குத்தகை உரிமைகள் வழங்கப்பட்டு விட்டன.

### தடைகளைத் தகர்த்தது ரெட்டி சகோதரர்களின் ஆதிக்கக் கொடி

கனிமங்கள் வைத்துள்ள முதலாளிகள் யாராவது சில தொழிலாளர்களை வைத்துக் கொண்டு 'மானாங்கானி'யாக கனிமங்களை வெட்டி, விருப்பப்படி லாரியில், கப்பலில் ஏற்றிக் கொண்டு போய் விற்றுவிட முடியாது. அப்படிச் செய்தால் நாட்டுவளம் அராஜகமாகச் சூறையாடப்பட்டு சுற்றுச்சூழல் கேடுகள் விளையும் என்பதால், பல ஆண்டுகளுக்கு முன்பே சுரங்கங்கள் வெட்டுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் சில கட்டுப்பாடுகளும், வரம்பீடுகளும், விதிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. சுரங்க நிர்வாகிகளுக்கான சான்றிதழ் பெற்ற அதிகாரிகளின் மேற்பார்வையில் கனிமம் வெட்டி எடுக்கப்பட வேண்டும். வெடிபொருட்களைப் பயன்படுத்துவதாலும், பணியாற்றுபவர்களின் சுவாசம் பாதிக்கப்படுவதும் விபத்துக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாலும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு சுரங்கத்திலும் குறிப்பிட்ட அளவுதான் (மண் சரிவும் விபத்தும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஆறு மீட்டர் ஆழம் வரைதான்) வெட்டியெடுக்க வேண்டும். ஒரு சுரங்கத்துக்கும் மற்றதுக்கும் குறிப்பிட்ட இடைவெளி விடவேண்டும். வனங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் காடு சாராத நடவடிக்கைகளில் ஈடுபடவும் கூடாது. வெட்டியெடுக்கப்படும் கனிமத்தை ஒதுக்கப்பட்ட குத்தகைப் பகுதிக்கு வெளியேயோ, ஏற்றுமதிக்காக துறைமுகங்களிலோ இருப்பு வைக்கும்போது அரசு புறம்போக்கு இடங்களில் குவித்து வைக்கக் கூடாது. லாரிகளில் குறிப்பிட்ட அளவுக்குத்தான் கனிமச் சுமையேற்றலாம். அதையும் தார்பாய் போட்டு மூடித்தான் கொண்டு செல்ல வேண்டும்.

இத்தனையையும் மேற்பார்வையிட்டு, சோதித்தறிந்து, அமலாக்க வேண்டிய பொறுப்புடையது மைய அதிகார அமைப்புக்குழு (சி.ஈ.சி). ஆனால், அதற்கென்று உள்ளூரில் அதிகாரிகள் கிடையாது. கனிம மற்றும் தாதுப் பொருட்கள் துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, மத்திய வருவாய் மற்றும் தீர்வுத்துறை, துறைமுகத்துறை மற்றும் போலீசு ஆகிய அரசுத் துறைகளின் அதிகாரிகளைக் கொண்டுதான் அப்பணிகள் செயல்படுத்தப்பட வேண்டிய நிலையே உள்ளது. அரசுத்துறை அதிகாரிகளைத்தான் மிகவும் எளிதாகவும் மலிவாகவும் விலைக்கு வாங்கிவிட முடியும். இந்த உண்மையை அறியாத சுரங்க முதலாளிகளே கிடையாது. அதிலும் குறிப்பாக பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் ஆள் பலம் - குண்டர்படை, பணபலம், அதிகாரபலம் மிக்கவர்கள். அவர்கள் தமது நரித்தனமான மூளையைப் பயன்படுத்தி கர்நாடகாவின் கனிம வளங்களைச் சூறையாடுவதில் வேறு எவரும் எட்டமுடியாத உச்சத்துக்கு

ரெட்டி சகோதரர்களின் பகட்டு வாழ்க்கை: அறுபது அறைகள் கொண்டதாகக் கட்டப்படும் ஆடம்பர மாளிகை; தமது குடும்பத்துக்குச் சொந்தமான ஹெலிகாப்டரில் ஜனார்த்தன ரெட்டி. (கோப்புப் படங்கள்)





போய்விட்டார்கள். விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், வரம்புகள், சட்டவிதிகள் எல்லாவற்றையும் தகர்த்து, பல பத்தாயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய இரும்புக் கனிமத்தை ஒரு சில ஆண்டுகளில் கடத்தி விற்றுள்ளார்கள், பெல்லாரி ரெட்டி சகோதரர்கள்.



ரெட்டி சகோதரர்களின் ஊழல்-அதிகார முறைகேடுகளை அம்பலமாக்கியுள்ள கர்நாடகா மாநில லோகாயுதா ஆணையர் சந்தோஷ் ஹெக்டே.

இத்தனைக்கும் ரெட்டி சகோதரர்களுக்கு பெல்லாரியில் இரும்புக் கனிமம் எடுப்பதற்கு ஒரு துண்டு நிலம் கூட குத்தகை உரிமை கிடையாது. ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் ஆசியோடு ''ஓபுலாபுரம் சுரங்கக் கம்பெனி''யை ரெட்டி சகோதரர்கள் தொடங்கியது ஆந்திராவின் அனந்தபுரம் மாவட்டத்தில் தான். அனந்தபுரத்தில் சுமார் 107 ஹெக்டேர் நிலத்தை அவர்கள் குத்தகைக்கு எடுத்திருந்தாலும், அங்குள்ள இரும்புக் கனிமம் ஏற்றுமதி செய்யுமளவுக்கு தரமானதில்லை. பெல்லாரி இரும்புக் கனிமத்துக்கு சீனத்தில் பெரும் கிராக்கி இருப்பதைக் கண்டு கொண்டு அவர்கள் தம் பார்வையை அங்கு திருப்பியபோது, அவர்கள் கால் வைப்பதற்கு கூட பெல்லாரியில் இடம் கிடையாது. ஒருமுறை குத்தகைக்கு விடப்பட்டால் 20 ஆண்டுகளுக்கு அதை இரத்து செய்ய முடியாது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிப்பதற்காக வரும்போதுதான் ரத்து செய்யலாம். இவ்வாறு பெல்லாரியில் மட்டும் 100 குத்தகைகளும், அருகிலுள்ள சித்திர துர்க்கா மற்றும் தும்கூர் மாவட்டங்களில் 60 குத்தகைகளும் ஏற்கெனவே தரப்பட்டிருந்தன.

பெல்லாரியில் குத்தகை எடுப்பதற்கு இன்னமும் 20 ஆண்டுகளுக்கு ரெட்டி சகோதரர்கள் காத்திருக்க வேண்டும். என்ன செய்வது? பணத்தை வீசி எறிந்தால் ரெட்டி சகோதரர்களுக்குச் சேவை செய்ய ஒரு சதிகார வழக்கறிஞர்கள் கூட்டம் ஆந்திராவில் காத்திருந்தது. அவர்கள் ஆலோசனை கொடுத்தார்கள். பெல்லாரியில் ஏற்கெனவே குத்தகை எடுத்துவிட்டு, இரும்புக் கனிமத்தை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான இயந்திர மற்றும் போக்குவரத்து வசதியில்லாதவர்கள் பலர் இருந்தனர். குத்தகைக்கு எடுத்து இரண்டு ஆண்டுகளில் வேலை தொடங்காவிட்டால் குத்தகை இரத்து செய்யப்படும். அப்படிப்பட்டவர்களைப் பிடித்து கொஞ்சம் பணம் கொடுத்து அவர்களின் பெயரில் உள்ள உரிமத்தைப் பயன்படுத்திக் கொள்வது; குத்தகைதாரர்களுக்கிடையேயான தகராறுகளைப் பயன்படுத்தியும், பணியாத குத்தகைதாரர்களை குண்டர்படையை வைத்து தாக்கியும் மிரட்டியும் வெளியேற்றிவிட்டு சுரங்கங்களை ஆக்கிரமித்துக் கொள்வது; போலி உரிமத்தைக் காட்டியும் இலஞ்சம் கொடுத்தும், அண்டை ஆந்திராவின் அனந்தபுரத்து சுரங்கங்களில் வெட்டியெடுக்கப்பட்ட இரும்புக் கனிமம் என்று கணக்குக் காட்டியும் துறைமுகங்களுக்குக் கடத்திக் கொண்டு போய் ஏற்றுமதி செய்துவிடுவது - இவைதான் சதிகார வழக்கறிஞர்களின் ஆலோசனை. இனி என்ன! களத்தில் குதித்த ரெட்டி சகோதரர்களின் ஆதிக்கக் கொடி ஏற்றப்பட்டது!

### ரெட்டி சகோதரர்களின் கிரிமினல் சாதனை!

''குருவி'' திரைப்படத்தில் காட்டப்படும் கடப்பா ரெட்டிகளின் கனிம சுரங்கத் தொழில் கொடூரத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமானது பெல்லாரி ரெட்டி சகோதரர்களின் கொடூரம். அந்தப் படத்தில் காட்டப்படுவதைவிடப் பிரம்மாண்டமான பல ஏக்கர் நிலத்தில் ரெட்டி சகோதரர்கள் நவீன மாளிகையை அரண்மனையைப் போல கட்டிவருகிறார்கள். அரை கி.மீட்டருக்கு நீண்ட நெடிய மதில் சுவர்களைக் கொண்ட பாதையில் கண்காணிப்பு காமிராக்களைக் கடந்துதான் அந்த மாளிகையை அடைய முடியும். ஒரு ஏக்கர் பரப்பில் 60-க்கும் மேற்பட்ட அறைகளைக் கொண்ட புதுக்கட்டிடம் எழுப்பப்படுகிறது. குண்டு துளைக்க முடியாத பாதுகாப்பு அறைகள், இரவுப் பார்வை உடைய அவர்களது ஹெலிகாப்டர்கள் இறங்கக் கூடிய மேடை, நீச்சல் குளம், நவீன உடற்பயிற்சிக் கூடம், சாரிசாரியான கார்களில் துப்பாக்கிகள் ஏந்திய பாதுகாப்புப் படையினர் என சினிமாவை விஞ் கிறது அந்த மாளிகை. அந்த மாளிகையை ஒட்டி, அதைபோலவே எல்லா வசதிகளும் நிரப்பிய மற்றொரு மாளிகை அவர்களின் நெருங்கிய சகாவும் கர்நாடகா மருத்துவ அமைச்சருமான சீரீராமுலுவுக்கும் உள்ளது.

இவ்வளவு பணத்தையும் சொத்துக்களையும் ஒரு குறுகிய காலத்தில் ரெட்டி சகோதரர்களால் எப்படிக் குவிக்க முடிந்தது?. பெல்லாரியில் உள்ள 68 கனிம வயல் குத்தகைகாரர்களின் 48 பேர்களுடன் மேல் குத்தகை ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். பணியாத குத்தகைதாரர்களின் கனிம வயல்கள் மீது குண்டர் படையை ஏவி ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

**குண்டு துளைக்க முடியாத பாதுகாப்பு அறைகள், அவர்களது ஹெலிகாப்டர்கள் இறங்கக் கூடிய மேடை, நீச்சல் குளம், நவீன உடற்பயிற்சிக் கூடம், சாரிசாரியான கார்களில் துப்பாக்கிகள் ஏந்திய பாதுகாப்புப் படையினர் என சினிமாவை விஞ் கிறது அவர்களது பகட்டு வாழ்க்கை**

**கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் ரெட்டி சகோதரர்கள் என்ன செய்கிறார்களோ, அதை மத்திய-கிழக்கு இந்திய காடுகளில் டாடா, எஸ்ஸார், வேதாந்தா, போஸ்கோ போன்ற உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகள் நாட்டின் 'வளர்ச்சி' என்ற போர்வையில் செய்துவருகிறார்கள்.**

பெல்லாரியில் சட்டவிரோதமாக வெட்டியெடுக்கப்பட்ட இரும்புக் கனிமத்தை காட்டுவழியே லாரிகளில் கடத்திக் கொண்டு வந்து இந்த ஏ.ஜி.கே.சுரங்கப் பகுதியில் குவித்து வைத்து விடுவார்கள். பிறகு, இக்கனிமம் முழுவதும் ஆந்திராவில் வெட்டியெடுக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டுவார்கள். கர்நாடகாவில் கள்ளத்தனமாக இரும்புக் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காக ஆந்திரா-கர்நாடகாவின் எல்லையையே அராஜகமாக மாற்றி அமைத்துக் கொண்டார்கள். எல்லைக் கற்களை அவ்வப்போது ரெட்டியின் ஆட்களே பிடுங்கி நட்டுக் கொள்வார்கள். ஆண்டுக்கு 2,3 முறை இப்படி நடக்கும். யாராவது புகார் கொடுத்து மேற்பார்வையிட அதிகாரிகள் வந்தால் இலஞ்சம் கொடுத்து அனுப்பி விடுவார்கள். ஒரு பாறைக் கோயிலின் அருகே ஆந்திரா-கர்நாடகா மாநில எல்லையைக் குறிக்கும் கல்வெட்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே செதுக்கப்பட்டிருந்தது. கோவிலோடு அதை வெடிவைத்துத் தகர்த்து வீசிவிட்டார்கள். அதன்மூலம் ஆந்திராவின் எல்லையை கர்நாடகாவுக்குள் தள்ளிப் போட்டுக் கொண்டு இரும்புக் கனிமத்தை வெட்டி எடுத்துக் கொண்டார்கள். சட்டவிரோதமாகக் காடுகளை அழித்து, இரும்புக் கனிமத்தை வெட்டியெடுத்ததோடு, அவற்றைச் சேர்த்து வைக்கவும் கடத்திச் செல்ல பாதை அமைக்கவும் காடுகளை அழித்தார்கள்.

வெட்டியெடுக்கப்பட்ட கனிமத்தை அருகிலுள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு ஒவ்வொரு லாரிக்கும் கனிம மற்றும் தாதுப் பொருட்கள் துறை மற்றும் வனத்துறை ஆகியவற்றின் ''பர்மிட்கள்'' வேண்டும். ஒவ்வொரு லாரியும் குறிப்பிட்ட அளவுதான் சுமை ஏற்றிச் செல்ல வேண்டும். இவற்றைச் சோதித்தறிவதற்கு வழியில் பல சோதனைச் சாவடிகள் உள்ளன. ஆனால், ஸ்வத்திக் அல்லது வேறு சின்னம் பொறித்த அட்டைகளை சோதனைச் சாவடிகளில் விசிறிக் காட்டிவிட்டு அந்த லாரிகள் பறக்கின்றன. துறைமுகத்தில் ஏற்றுமதியின் போதும் சோதித்தறியப்படும். ஆனால், போலி ''பர்மிட்''டுக்களை தயாரித்தும், இவை எல்லாவற்றையும் மீறி இலஞ்சம் கொடுத்தும் மிரட்டியும் ஏமாற்றியும் இரும்புக் கனிமத்தைக் கடத்திக் கொண்டு போனார்கள்.

துரிதப் பணம் சம்பாதிப்பதற்காக ஒவ்வொரு லாரியிலும் ஒன்றரை அல்லது இரண்டு மடங்கு மிகை சுமை ஏற்றினார்கள். 10,000 லாரிகள் ஓட்டப்பட்டன. ஒவ்வொன்றும் நாளுக்கு 600 கி.மீ. தூரத்துக்குப் போய் வந்தன. இவ்வளவு லாரிகளையும் ஓட்டுவதற்கு ஓட்டுநர்கள் கிடைக்காததால், கிளீனர்களே ஓட்டி பல விபத்துகள் நடந்தன. இவ்வளவு சுமை வாகனங்களைத் தாங்க முடியாத சாலைகள் நாசமாகின. தார்ப்பாய் போட்டு மூடி எடுத்துச் செல்லாததால் (அப்படிச் செய்ய கூடுதல் செலவும் தாமதமும் ஆகும்) வழியெல்லாம் இரும்புக் கனிமத் துகள் பறந்து, எங்கும் செம்மண் புழுதியாகி சுற்றுச் சூழல் நாசமாகின.

ஒருமுறை கர்நாடகா ஊழல் தடுப்பு லோகாயுதா அதிகாரிகள் சோதனையிட்டபோது எந்த லாரிக்கும் உரிம ஆவணங்கள் ''பர்மிட்டுகள்'' கிடையாது. இரண்டு கோணிப் பைகள் நிறைய போலி ஆவணங்கள் பிடிபட்டன. 200 கோடி ரூபாய் மதிப்புடைய இரும்புக் கனிமங்கள் கைப்பற்றப்பட்டு துறைமுகத்தில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டது. அவற்றை ஒரே வாரத்தில் திருடி விற்று விட்டுக் காணவில்லை என்று அறிவித்துவிட்டார்கள். சோதனையிட்ட அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். சி.பி.ஐ. ரெய்டு வருகிறது என்று அறிந்து, பெல்லாரி அருகே உள்ள தனது சுரங்கக் கம்பெனி அலுவலக ஆவணங்களை இரவோடு இரவாக அள்ளிக் கொண்டுபோன ரெட்டி சகோதரர்கள், அந்த அலுவலகத்தையே இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டார்கள்.

இப்போது 5,6 ஆண்டுகளில் 60,000 கோடி ரூபாய் மதிப்புடைய 71 இலட்சம் டன்கள் இரும்புக் கனிமங்கள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாக ஒப்புக் கொள்ளும் மாநில, மத்திய அரசுகளும் ஆளும் கட்சிகளும் முறையே மாநில லோகாயுதா விசாரிப்பதா, சி.பி.ஐ. விசாரிப்பதா என்று இலாவணிக் கச்சேரி நடத்துகிறார்கள். கொஞ்சநாள் இது நடக்கும், பிறகு எவ்வித பாதிப்புமில்லாமல் பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் தமது ''ராஜ்ஜியத்தைத்'' தொடர்வார்கள். ஏனெனில் ஆந்திராவில் காங்கிரசும், கர்நாடகாவில் பா.ஜ.க.வும் அவர்களின் சட்டைப் பைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.

சிதம்பரம் கூறுவதைப் போல அரசாங்கத்தின் சட்டத்திற்குச் சவாலாய் விளங்கும் காரணத்திற்காக காட்டு வேட்டை நடத்துவது என்றால் முதலில் ரெட்டி சகோதரர்களுக்கெதிராக நடத்த வேண்டும். ஆனால், கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் ரெட்டி சகோதரர்கள் என்ன செய்கிறார்களோ அதை மத்திய-கிழக்கு இந்திய காடுகளில் டாடா, எஸ்ஸார், வேதாந்தா, போஸ்கோ போன்ற உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக, பன்னாட்டு, தரகு முதலாளிகள் நடத்துவதற்கு வசதியாக பழங்குடி மக்கள் மற்றும் மாவோயிச நக்சல்பாரிகளை அகற்ற வேண்டியுள்ளது. அதற்காக ஏவிவிடப்பட்டுள்ளதுதான் சோனியா - மன்மோகன் - சிதம்பரம் நடத்தும் காட்டு வேட்டை.

● ஆர்.கே.

# உமாசங்கரின் வியக்கத்தக்க உறுதி! கருணாநிதி அரசின் வெறுக்கத்தக்க கயமை!

நேர்மையானவர் என்ற அங்கீகாரத்தையும் நன்மதிப்பையும் பெற்றிருக்கும் ஐ.ஏ.எஸ் அதிகாரி உமா சங்கரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்திருக்கிறது உத்தமர் கருணாநிதி அரசு. வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாகக் கூறி அவர் மீது ஏவப்பட்ட விசாரணை சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்து விட்டதால் ஆத்திரம் தலைக்கேறிப் போய், தலித் கிறித்தவரான உமாசங்கர், தலித் இந்து என்று போலிச் சான்றிதழ் கொடுத்துப் பதவிக்கு வந்துவிட்டாரெனக் கூறி, அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார் கருணாநிதி.

1995-இல் (ஜெ ஆட்சியில்) மதுரை மாவட்டத்தின் கூடுதல் ஆட்சியராக இருந்தபோது, சுடுகாட்டுக் கூரை ஊழலை வெளிக்கொண்டு வந்தபோதுதான் உமாசங்கர் மக்கள் மத்தியில் பிரபலமானார். ஜெயலலிதா ஆட்சியின் ஊழலைச் சொல்லி, 1996-இல் ஆட்சியைப் பிடித்த கருணாநிதி, ஊழல் கண்காணிப்புத் துறையின் கூடுதல் ஆணையராக உமாசங்கரை நியமித்தார். ஜெயா, அவரது அமைச்சர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளின் ஊழல்களை உமாசங்கர் வெளிக்கொணர்ந்த போதிலும், செல்வாக்குள்ள ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்தது கருணாநிதி அரசு. வெறுப்புற்ற உமாசங்கர், தன்னை இப்பதவியிலிருந்து விடுவிக்குமாறு கோரியவுடனே, அவர் திருவாரூர் மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டார்.

மே 2006-இல் எல்காட் என்ற அரசு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டதும், அதுவரை மைக்ரோசாப்ட் மென்பொருட்களைச் சார்ந்திருந்த அரசுத்துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து பில்கேட்ஸை வெளியேற்றிவிட்டு, 2007-ஆம் ஆண்டு முதல் 'லினக்ஸ்' என்ற ஓபன் சோர்ஸ் (இலவச) மென்பொருளை அறிமுகப்படுத்தினார் உமாசங்கர்.

''மைக்ரோசாப்ட் ஆத்திரம் கொண்டால் நம் நாட்டின் மென்பொருள் துறையே தேங்கிவிடும் என்று கருதுவது அபத்தமானது... மைக்ரோசாப்ட் இல்லாமல் இந்தியா வாழ முடியும். முன்னேறவும் முடியும். இந்தியா என்ற மிகப்பெரிய சந்தையை இழப்பது மைக்ரோசாப்ட் நிறுவனத்துக்குத்தான் பேரிழப்பு. மைக்ரோசாப்டிலிருந்து வெளியேறியதன் விளைவாக தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு 200 முதல் 500 கோடி வரை மிச்சமாக்க முடியும்'' என டெக்கான் கிரானிக்கிள் பத்திரிகைக்கு அப்போது அளித்த பேட்டியில் குறிப்பிடுகிறார் உமாசங்கர். மைக்ரோசாப்டின் உயர் அதிகாரி ஒருவர் தமது மென்பொருள் தொகுப்பை 7000 ரூபாய்க்குத் தருவதாக பேரம் பேசினாரென்றும், ஓபன் சோர்ஸில் செலவே இல்லாமல் தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய மென்பொருளுக்கு நாங்கள் எதற்காக 7000 ரூபாய் செலவழிக்கவேண்டும் என்று கூறி அவரைத் திருப்பி அனுப்பியதாகவும், அப்பேட்டியில் கூறுகிறார் உமாசங்கர்.

எல்காட்டின் பொறுப்புக்கு உமாசங்கர் வருவதற்கு சில ஆண்டுகள் முன்னர், தியாகராச செட்டியார் என்பவருக்குச் சொந்தமான 'நியூ எரா டெக்னாலஜீஸ்' என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து எல்காட் நிறுவனம், 'எல்நெட்' என்றொரு கூட்டுப்பங்கு நிறுவனத்தை உருவாக்கியிருந்தது. 24% பங்குகள் தியாகராச செட்டியாரிடமும், 26% பங்குகள் எல்காட்டிடமும், மீதமுள்ள 50% பங்குகள் பொதுமக்களிடமும் இருந்த இந்நிறுவனம், 2004 ஆம் ஆண்டில், 'இ.டி.எல் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்' என்ற கட்டு



**உமாசங்கர் அர கேபிள் டி.வி. கார்ப்பரேசனின் நிர்வாக இயக்குனராக இருந்த பொழுது மங்கலி கேபிள் விஷன் நிறுவனம் ஏவிவிட்ட குண்டர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறைவைக்க வேண்டுமென்றும் அந்நிறுவனத்தை நாட்டுடமையாக்க வேண்டும் என்றும் அர க்கு சிபாரி செய்தார் உடனே அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை ஏவப்பட்டது.**

**ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஆகி மக்களுக்குத் தொண்டாற்றப் போவதாகக் கூறுவோரின் மடமையையும், ஆளும் வர்க்கத்துக்கு மட்டுமே சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் அதிகாரவர்க்கத்தை, மக்கள் தொண்டாற்றும்படி மாற்றியமைத்துவிட முடியும் என்று கூறுவோரின் கயமையையும் புரிந்து கொள்வதற்கு, உமாசங்கரின் அனுபவம் ஒரு எதிர்மறை எடுத்துக்காட்டு.**

மான நிறுவனத்தைத் தனது துணை நிறுவனமாக உருவாக்கியிருந்தது. சென்னையில் 18 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.700 கோடி மதிப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (கட்டிடம்) ஒன்றை இந்நிறுவனம் உருவாக்கியிருந்தது. தமிழக அரசின் 26% பங்குகளையும் பொதுமக்களின் 50% பங்குகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நிறுவனமும், அதன் 700 கோடி சொத்தும், 24% பங்குளை மட்டுமே வைத்திருந்த தியாகராச செட்டியாருக்கு மர்மமான முறையில் கைமாறியிருப்பதை உமாசங்கர் கண்டுபிடித்தார். ''2008, ஜூலை 8-ஆம் தேதியன்று தரமணியில் உள்ள எல்நெட் நிறுவனத்தில் இவை தொடர்பான ஆவணங்களை நானே நேரடியாகத் தேடிக்கொண்டிருந்த போது, என்னுடைய பதவி பறிக்கப்பட்ட தகவல் வந்து சேர்ந்தது'' என்று தனது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார் உமாசங்கர்.

அடுத்து, சன் டிவி - கருணாநிதி மோதலின் தொடர்ச்சியாக, அரசு கேபிள் டிவி கார்ப்பரேசனின் நிர்வாக இயக்குநர் பதவியில், அக்டோபர் 2008-இல் நியமிக்கப்பட்டார் உமாசங்கர். அரசு கேபிள் டிவி ஆப்பரேட்டர்களை மிரட்டியதுடன், ரவுடிகளை வைத்து வயர்களையும் அறுத்தெறிந்தனர் மாறன் சகோதரர்கள். இவர்களுக்குத் துணை நின்றவர் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி. இது குறித்துப் பல புகார்கள் கொடுத்தும் போலீசு நடவடிக்கை எடுக்காததால், இவர்களைத் தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் சிறை வைக்கவேண்டும் என்றும், சுமங்கலி கேபிள் விஷன் நிறுவனத்தை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்றும் உமாசங்கர் அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறார். உடனே அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏவப்படுகிறது. அந்த ஒழுங்கு நடவடிக்கை சட்டவிரோதமானது என்று மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் இடைக்காலத் தடை விதித்ததனால், 2009, சனவரி 23-ஆம் தேதியன்று சிறுசேமிப்புத்துறைக்குத் தூக்கியடிக்கப்பட்டார் உமாசங்கர். இவற்றின் தொடர்ச்சியாக இப்போது வந்திருப்பதுதான் ஊழல் வழக்கும் தற்காலிகப் பணிநீக்கமும்.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழக அரசின் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் விதிமுறைகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்துக்கும் ஊழல் தடுப்புச் சட்டத்துக்கும் விரோதமாக, திட்டமிட்டே வடிவமைக்கப்பட்டிருப்பதை அம்பலமாக்கியிருக்கிறார் உமாசங்கர்.

''ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், அரசுத்துறை நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் போன்றோர் மீது ஊழல் குற்றத்துக்காக யாரேனும் வழக்கு தொடரவேண்டுமானால், அதற்கு அரசின் முன் அனுமதி தேவை'' என்று கூறும் இவ்விதிமுறை, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையே கேள்விக்குள்ளாக்குவதோடு, ஊழல் அதிகாரிகளுக்குப் பாதுகாப்புக் கவசமாகவும் பயன்படுகிறது என்கிறார் உமாசங்கர். அனுமதி அளிக்கும் அதிகாரம் முதல்வர் உள்ளிட்ட மூன்று பேர் அடங்கிய குழுவிடம் இருப்பதால், நேர்மையான அதிகாரிகளை மிரட்டுவதற்கும், ஊழல் அதிகாரிகளைத் தப்பவைப்பதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது என்பதையும் ஆதாரங்களுடன் திரைகிழித்திருக்கிறார் உமாசங்கர்.

''ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் கூடுதல் இயக்குநராக 1996 முதல் தான் பணியாற்றிய காலத்தில், கல் குவாரி ஊழல் (1000 கோடி ரூபாய்), சவுத் இந்தியா ஷிப்பிங் கார்ப்பரேசன் தனியார்மயமாக்கல் ஊழல் (200 கோடி ரூபாய்), தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழல் (சென்னையின் மையப்பகுதியில் அமைந்த 300 வீடுகள்) போன்ற பல ஊழல் வழக்குகளில் அதிகாரிகள் மீது வழக்கே தொடர முடியாததற்குக் காரணம் முதல்வர் தலைமையிலான குழுவின் அனுமதி கிடைக்காததுதான். அதுமட்டுமல்ல, பல்வேறு ஊழல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, மேற்படி முதல்வர் குழுவின் அனுமதி கிடைக்காததால் தண்டனையிலிருந்து தப்பிவரும் ஐ.ஏ.எஸ் அதிகாரி மாலதி என்பவர் தான் தற்போது ஊழல் தடுப்புத் துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்'' என்ற கேலிக்கூத்தையும் போட்டுடைத்திருக்கிறார் உமாசங்கர்.

அவருடைய அனுபவத்தைப் படிக்கும்போதே ரத்தம் கொதிக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்திருந்த போதிலும் எல்லா அதிகார பீடங்களையும் துச்சமாகக் கருதி எதிர்த்து நிற்கும் அவரது துணிவும், எத்தனை முறை பந்தாடப்பட்டும் தளராத அவரது மன உறுதியும் வியக்கத்தக்கவை. அதிகார வர்க்கத்தில் இப்படி ஒரு மனிதரைக் காண்பது அரிதினும் அரிது. அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் அனைத்துத் துறைகளிலும் கோலோச்சும் இந்தக் காலத்தில், அதிகாரவர்க்கக் கோட்டையையும் ஆட்டமுடியும் என்று காட்டியிருக்கிறார் உமாசங்கர். அவ்வகையில் அவரது அனுபவம் ஒரு நேர்மறை எடுத்துக்காட்டு.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஆகி மக்களுக்குத் தொண்டாற்றப் போவதாகக் கூறுவோரின் மடமையையும், ஆளும் வர்க்கத்துக்கு மட்டுமே சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் அதிகாரவர்க்கத்தை, மக்கள் தொண்டாற்றும்படி மாற்றியமைத்துவிட முடியும் என்று கூறுவோரின் கயமையையும் புரிந்து கொள்வதற்கு, உமாசங்கரின் அனுபவம் ஒரு எதிர்மறை எடுத்துக்காட்டு.

● அஜித்

# இந்தியாவின் ஆசியுடன் ராஜபக்சவின் ஆதிக்கம்

**ஈழத்துரோகிகளையும் எடுபிடிகளையும் கொண்டு, தமிழின அடையாளத்தையே அழித்து ஆதிக்கம் செய்ய முயற்சிக்கிறது ராஜபக்ச கும்பல்**

இலங்கையில் ஈழத் தமிழினத்தை நரவேட்டையாடிய இனவெறி பயங்கரவாத ராஜபக்ச கும்பல், போருக்குப் பின்னர் நாடாளுமன்றப் பெரும்பான்மை பலத்தையும் இராணுவ பலத்தையும் கொண்டு பாசிசத் திமிரோடு கொட்டமடித்து வருகிறது. முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழர்கள் மீள்குடியேற்றப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும், முகாம்களில் இருந்தவர்கள் அவரவர் ஊர்களுக்கு அருகில் மீண்டும் முகாம்களில் தான் வைக்கப்பட்டுள்ளார்கள். உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறித் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அந்த இடங்கில் நிரந்தர இராணுவ முகாம்களும் ஒரு லட்சம் இராணுவத்தினர் குடும்பத்துடன் தங்க வீடுகளும் அதிவேகமாக அமைக்கப்படுகின்றன. தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் நான்கு லட்சம் சிங்களர்கள் குடியேறவுள்ளனர். தமிழர் பகுதிகளை இராணுவமயமாக்கி, தமிழர்களை மேலும் சிறுபான்மையாக்குவதுதான் இலங்கை அரசின் திட்டமாக உள்ளது.

இத்தனையும் போதாதென்று, இப்போது அரசியல் ரீதியாகவும் துரோகிகளையும் எடுபிடிகளையும் கொண்டு ஈழத் தமிழனத்தைப் பிளவுபடுத்தி தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள ராஜபக்ச கும்பல் முயற்சித்து வருகிறது.

எட்டி உதைக்கும் காலை இறுகப் பற்றி நிற்க வேண்டிய அவலம்: கருணாநிதியுடன் ஈழத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.கள் குழு



ஈழப் போரைத் தொடர்ந்து புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். ஆனால், இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளரான குமரன் பத்மநாதன் என்கிற கே.பி., இலங்கை அரசுடன் இணைந்து உல்லாசமாகவும் பாதுகாப்பாகவும் வலம் வந்து கொண்டிருக்கிறார். தடுப்பு முகாம்களில் உள்ள சில விடுதலைப் புலிப் போராளிகளையும், விடுவிக்கப்பட்ட சில அரசியல் பிரிவு போராளிகளையும் இணைத்து வடபகுதி அரசியலில் கே.பி.யை ஈடுபடுத்த இலங்கை அரசு முனைப்பு காட்டி வருகிறது. புலம் பெயர்ந்த தமிழர்கள் சிலருடன் சேர்ந்து வடக்கு-கிழக்கின் மறுவாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் கே.பி. உதவப் போகிறார் என்று அரசே அறிவித்துள்ளது. அதன்படியே, அண்மையில் கே.பி. மலேசியாவில் நிதி திரட்டும் நிகழ்ச்சியை நடத்தியுள்ளார்.

இப்போது கே.பி.யை முதலமைச்சருக்கான வேட்பாளராக நியமிக்கப்போவதாக அரசு அறிவித்திருப்பதால், வடமாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டால், அரசாங்க ஆதரவுடன் முதலமைச்சருக்கான வேட்பாளராகக் களம் இறங்கத் திட்டமிட்டிருந்த இலங்கை அரசின் கைக்கூலியான டக்ளஸ், நெருக்கடியில் உள்ளார். இதனால் அவர் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி, ஆனந்த சங்கரி, ஈரோஸ், சிவாஜிலிங்கம் அணி உள்ளிட்ட 7 குழுக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு களமிறங்க முயற்சித்து வருகிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வெற்றிபெறும் இடங்களைவிட, டக்ளஸ் அணியும் கே.பி. அணியும் தனித்தனியே போட்டியிட்டு பெறும் மொத்த இடங்கள் அதிகமாக இருந்தால், வடமாகாண சபையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்று ராஜபக்ச கும்பல் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

புலிகள் இயக்கத்தின் மற்றொரு பிளவுபட்ட குழுவினர், அரசு தந்திர ரீதியாக இந்தியாவுக்கு நிர்ப்பந்தங்கள் தருவதன் மூலம் இந்திய ஆதரவுடன் தமிழீழ அரசை நிறுவ முயற்சிக்கின்றனர். நாடு கடந்த தமிழீழ அரசு உருவாக்கத்தின் இணைப்பாளரான உருத்திர குமாரன், ''இந்திய நலன்களும் ஈழத் தமிழர் நலன்களும் இணையும்

போது தமிழீழத் தனியரசுக்கான ஆதரவினை நாம் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியும். இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு என்றே நாங்கள் கருதுகிறோம்'' என்கிறார்.

இது ஒருபுறமிருக்க, அண்மையில் இலங்கை அதிபர் ராஜபக்ச டெல்லிக்கு வந்து இந்தியாவுடன் ஏழு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார். இலங்கை இராணுவத்தை வலுப்படுத்தவும் பயிற்சி அளிக்கவும் உதவி வரும் இந்தியா, மறுபுறம் ஈழத் தமிழர் மீள் குடியேற்றத்துக்காக 50,000 வீடுகள் கட்டியமைக்கவும், தலைமன்னாரிலிருந்து ரயில் பாதை அமைக்கவும் சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கவும் கடனுதவி செய்ய இசைந்துள்ளதோடு, இலங்கையில் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தைச் செயல்படுத்த சிபாரிசு செய்துள்ளது. அதாவது, ஈழத்தமிழர்களின் பாரம்பரிய வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக்கி, இந்தியாவில் உள்ளது போல அத்தமிழ் மாநிலத்துக்கு அதிகாரங்களை வழங்கக் கோருகிறது. இதற்கேற்ப அதிகாரப் பகிர்வுக்கான தீர்வு ஒன்றை வகுக்க தமிழ் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளதாக ராஜபக்சே அறிவித்துள்ளார். புலிகளுக்கும் ஈழத் தமிழனத்திற்கும் எதிரான போரில் துணைநின்று வழிகாட்டி இயக்கியதோடு, ராஜபக்ச கும்பலின் பாசிச ஆட்சிக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்து, இலங்கை அரசியலிலும் தலையிட்டு, இலங்கை மீது தனது அரசியல் ஆதிக்கத்தை இந்தியா வலுப்படுத்திக் கொண்டு வருகிறது. இந்தியாவின் உறுதியான ஆதரவினால்தான் போர்க்குற்ற விசாரணைக்கான ஐ.நா. சபையின் குழுவினரை இலங்கைக்குள் அனுமதிக்க மறுத்து ராஜபக்ச அரசு கூச்சலிடுகிறது.

மறுபுறம், முன்னாள் புலி ஆதரவு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கையறு நிலையில் தவிக்கின்றனர். இந்திய மேலாதிக்க அரசின் தயவை நாடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு போக்கிடமில்லாத பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழுவினர் டெல்லி சென்று மன்மோகன் சிங், ப.சிதம்பரம், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் உட்பட பலரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். இந்திய அரசுடன் பேசுவது போல, இலங்கை அரசுடனும் தொடர்ந்து பேசுங்கள் என்று டெல்லி அவர்களிடம் கட்டளையிட்டுள்ளது. அதன்படியே, 13-ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் அடிப்படையிலான மாதிரி அரசிலமைப்பு தொடர்பாக இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

இதைத் தொடர்ந்து சென்னைக்கு வந்து இக்குழுவினர் கருணாநிதியையும் சந்தித்தனர். ஆனால், கருணாநிதி அவர்களிடம் கறார் குரலெழுப்பினாராம். கோபாலபுரத்தில் வெளிபட்ட வார்த்தைகள் இந்திய மேலாதிக்க நலன்களுக்கேற்ப கடுமையாகவும் உறுதியாகவும் வந்து



இந்திய மேலாதிக்கத் தலையீட்டை வலியுறுத்தும் தமிழக எதிர்க்கட்சிகளின் மீனவர் படுகொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டம்.

விழுந்தனவாம். ''எட்டி எட்டி உதைக்கிற காலைக்கூட இறுக்கமாகப் பற்றிக் கொள்வதைத் தவிர, எங்களுக்கு வேறு வழியில்லை என்று இலங்கைத் தமிழ்த் தலைவர் ஒருவர் சொல்வதுதான் இன்றைய பரிதாபகரமான யதார்த்தம்'' என்று இச் சந்திப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது, ஜூனியர் விகடன்.

இந்திய மேலாதிக்கமும் அதற்குத் துணைநின்று பக்கமேளம் வாசிக்கும் கருணாநிதியும் ஒருபுறமிருக்க, ஜெயலலிதாவும் அவரது கூட்டணிக் கட்சிகளும் அண்மையில் தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டதையும் இதர மீனவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி, இந்திய மேலாதிக்கத்தையும் தலையீட்டையும் மேலும் தீவிரமாக்கக் கோருகின்றன. இலங்கை அரசின் அட்டூழியங்களுக்குக் காரணம் சீனாதான் என்றும், சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் வேரூன்றிவிட்டதாலேயே இலங்கை அரசு இந்தியாவின் வேண்டுகோள்களை மதிக்காமல், தமிழக மீனவர்களை வேட்டையாடுகிறது என்றும் இக்கட்சிகள் கூப்பாடு போடுகின்றன.

இலங்கையில் சீனா ஆதிக்கம் செய்தாலும், அல்லது இந்தியா ஆதிக்கம் செய்தாலும் அது ஈழத்தமிழருக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் நாட்டுக்கும் எதிரானதாகவே அமையும். இருப்பினும், தமிழக ஓட்டுக் கட்சிகள் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவதென்பது, இப்போது இந்திய மேலாதிக்கத்திற்கான நிகழ்ச்சிநிரலாக மாறிவிட்டது. இந்திய அரசையும் தெற்காசியாவில் அதன் மேலாதிக்கத்தையும் அம்பலப்படுத்தி முறியடிப்பதன் மூலம்தான், போர்க் குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்க முடியும். கருணாநிதி அல்லது ஜெயலலிதாவின் பின்னே வால்பிடித்துச் செல்வதன் மூலமோ அல்லது இந்திய மேலாதிக்க அரசை தாஜா செய்வதன் மூலமோ ஈழத் தமிழரின் விடுதலையை ஒருபோதும் சாதிக்க முடியாது. இந்திய மேலாதிக்க நலன்களுக்காகத் தமிழக மீனவர்கள் காவு கொடுக்கப்படுவதையும் தடுக்க முடியாது.

● மனோகரன்

## ஆப்பிரிக்கா:

# பன்னாட்டு முதலாளிகள் நடத்தும் நிலப்பறிப்பு

**ஆப்பிரிக்காவின் கனிம வளங்களைச் சூறையாடிய பன்னாட்டு முதலாளிகள், அக்கண்டத்தின் வளமிக்க நிலங்களையும் அபகரிக்கத் தொடங்கிவிட்டனர்.**

இயற்கை வளங்களில் எத்தனை வகையுண்டோ அத்தனையும் கொட்டிக் கிடக்கும் கண்டம் ஆப்பிரிக்கா. தங்கம், வைரம் முதல் கச்சா எண்ணெய் வரை அங்கு இல்லாத செல்வங்களே இல்லை எனலாம். ஆனால் ஆப்பிரிக்காவின் இயற்கை வளங்கள்தான் அதற்கு சாபக் கேடாவும் உள்ளது. பத்தொன்பதாம் -ற்றாண்டில் ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் தொடங்கி, அமெரிக்கா தலைமையிலான இன்றைய மறுகாலனியாதிக்க வாதிகள் வரை தொடர்ந்து அந்தக் கண்டத்தைச் சுரண்டி -சூறையாடி வருகிறார்கள். அவர்களுக்குத் தனது வளங்களை அள்ளிக் கொடுத்த ஆப்பிரிக்கா பதிலுக்குப் பெற்றுக் கொண்டதெல்லாம் பஞ்சமும், பசியும், பட்டினியும் கூடவே இனக் கலவரங்களையும்தான்.

உணவு உற்பத்தியில் மிகவும் பின்தங்கி, தனது நாட்டு மக்களின் உணவுத் தேவைக்காக பணக்கார நாடுகளிடம் கையேந்தி நிற்கும் ஆப்பிரிக்க நாடுகளில்தான் உலகின் மிக வளமான விவசாய நிலங்கள் உள்ளன. தற்போது அந்த விவசாய நிலங்களைக் குறிவைத்து உலக நாடுகள் ஆப்பிரிக்காவில் இறங்கியுள்ளன.

எதிர்காலத்தில் தங்களது நாட்டில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் ஆபத்து இருப்பதால், உணவு உற்பத்திக்கென பணக்கார அரேபிய நாடுகள் இப்பொழுதே ஆப்பிரிக்காவில் நிலங்களைக் கையகப்படுத்த ஆரம்பித்துவிட்டன. அமெரிக்காவின் நிதியாதிக்க கொள்ளைக்கார நிறுவனங்கள் ஆப்பிரிக்காவில் விவசாய நிலங்களை வாங்கிக் குவிப்பதற்கென்றே தனியாக நிதி திரட்டி வருகின்றன.

சர்வதேசிய உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் என்ற அமைப்பின் புள்ளி விவரப்படி, 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரைக் கிட்டத்தட்ட 2 கோடி ஏக்கர் வரையிலான நிலங்கள் ஆப்பிரிக்க நாடுகளிடமிருந்து வாங்கப்பட்டுள்ளன. அரேபிய நாடுகளைத் தவிர இந்தியா, சீனா, தென் கொரியா போன்ற நாடுகளும் நிலப்பறிப்பில் இறங்கியுள்ளன. நிலங்களை ஒட்டுமொத்தமாக விலைக்கு வாங்கியோ 99 வருட குத்தகைக்கு எடுத்துக் கொண்டோ இந்த நாடுகள், இந்த நிலப்பறிப்பில் ஈடுபடுகின்றன. கென்யா, சூடான், தான்சானியா, எத்தியோப்பியா, கானா, மாலி, மடகாஸ்கர், மொசாம்பிக் மற்றும் காங்கோ போன்ற நாடுகளில் தற்போது இந்த நிலப் பறிமுதல் வெகுவேகமாக நடைபெறுகிறது.

இதில் இந்திய நிறுவனங்கள் மட்டும் சுமார் 15 ஆயிரம் கோடி ருபாய் வரை முதலீடு செய்து கென்யா, எத்தியோப்பியா, மொசாம்பிக், செனகல், மடகாஸ்கர் போன்ற நாடுகளில் நிலங்களை வாங்கிக் குவித்துள்ளன. இந்நிலங்களில் பல்வேறு உணவு தானியங்களையும், உயிர்ம எரிபொருளுக்குத் தேவையான பயிர்களையும் உற்பத்தி செய்யப் போகின்றன. மேற்கூறிய நாடுகளின் அரசுகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் இந்திய அரசு, இந்த நிலப் பறிமுதலுக்கு அவர்களைத் துணை போகும்படி நிர்பந்திக்கிறது.

நைல், நைஜர், காங்கோ, ஆரஞ்சு போன்ற நதிகள் இப்பகுதி விவசாயத்தின் ஆதாரமாக விளங்குகின்றன. எனவே, இந்த நதிகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அவை பாயும் நாடுகளின் அரசுகளைத் தங்களது கைப்

ஏழை கருப்பின மக்களின் நிலங்களை வாங்கிக் குவிப்பது, ஆப்பிரிக்கக் கண்டத்து நாடுகளையே விற்பதற்குச் சமமானது என அம்பலப்படுத்தி அக்கண்டத்து மக்களால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிர ரம்.



பொம்மைகளாக வைத்துக் கொள்ள பணக்கார நாடுகள் தங்களுக்குள் போட்டி போடுகின்றன.

அடுத்த -று ஆண்டுகளுக்கு இப்பகுதியில் தண்ணீரை மையமாக வைத்தே அரசியல் நடைபெறும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளில் உலக அளவில் உணவு தானிய விளைச்சலில் ஏற்பட்ட சரிவையடுத்து பல நாடுகள் உணவுப் பொருள் ஏற்றுமதியைத் தடை செய்துவிட்டன. இதனால் உணவுப் பொருட்களை மற்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து வந்த அரேபிய நாடுகளும் ஜப்பான், இஸ்ரேல், இந்தியா போன்ற நாடுகளும் உணவு தானியங்களுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டியதாயிற்று. ஒரு கட்டத்தில் எவ்வளவு விலை கொடுத்தாலும் உணவு தானியம் கிடைக்காத நிலை ஏற்பட்டது.

இதிலிருந்து பாடம் கற்றுக் கொண்ட நாடுகள், உணவு தானியப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், தானிய இறக்குமதியினால் ஏற்படும் நட்டத்தை ஈடு கட்டவும் ஆப்பிரிக்க நாடுகளில் நேரடியாக நிலத்தை வாங்கி மலிவான விலையில் உணவு தானியங்களை உற்பத்தி செய்து கொள்ளும் திட்டத்தில் இறங்கியுள்ளன.

ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெறும் நிலப்பறிமுதலுக்கு இன்னொரு காரணமும் உள்ளது. அது உயிர்ம எரிபொருளுக்கு உலக அளவில் ஏற்பட்டிருக்கும் புதிய சந்தை. அமெரிக்கா தனது எரிபொருள் தேவையில் 10 சதவீதத்தை உயிர்ம எரிபொருளைக் கொண்டு நிறைவு செய்யப்போவதாக முடிவெடுத்துள்ளதால், உயிர்ம எரிபொருளுக்கு உலக அளவில் ஒரு சந்தை ஏற்பட்டுள்ளது. அதனால் உயிர்ம எரிபொருள் உற்பத்திக்குத் தேவையான காட்டாமணக்கு, இனிப்புச் சோளம் போன்றவற்றைப் பயிரிட ஆப்பிரிக்க நாடுகளில் நிலம் வாங்குவது அதிகரிக்கிறது.

1990-களில் வளைகுடா நாடுகள் சூடானில் விவசாய நிலங்களை வாங்கியதிலிருந்து ஆப்பிரிக்க நாடுகளில் விவசாய நிலங்களின் விற்பனை தொடங்கியது. ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடி ரூபாய்களை பணக்கார நாடுகளிடமிருந்து உணவு மானியமாகப் பெறும் அந்நாட்டு அரசுகள் விவசாய நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கத் தயாராய் இருக்கின்றன.

## பன்னாட்டு நிலக்கொள்ளையர்கள்



8 கோடி மக்கள் தொகை கொண்ட எத்தியோப்பியாவில் 1.5 கோடிக்கும் அதிகமான மக்கள் ஐ.நா.வின் உணவுத் திட்டத்தைச் சார்ந்திருக்கிறார்கள். இதே எத்தியோப்பியாவில்தான் 75 லட்சம் ஏக்கர் வளமான விவசாய நிலத்தை கையகப்படுத்தியுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள், அதில் விளையும் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்கின்றன. இதற்கு அந்நாட்டில் கடுமையான எதிர்ப்பு இருந்தாலும், மெலிஸ் ஜென்வானியின் தலைமையிலான சர்வாதிகார அரசு அவற்றையெல்லாம் கண்டுகொள்வதில்லை.

அதேசமயம், இந்த நிலக் கொள்ளையை எதிர்க்கும் நாடுகளைப் பணிய வைக்க ஒட்டு மொத்த மேற்கத்திய நாடுகளும் ஓரணியில் நிற்கின்றன. இதற்கு ஜிம்பாப்வே சரியான உதாரணம். ஜிம்பாப்வேயின் மக்கள் தொகையில் 1 சதவீதம் மட்டுமே உள்ள வெள்ளையர்கள் 70 சதவிதத்துக்கும் அதிகமான விவசாய நிலங்களைக் கட்டுப்படுத்தி வந்தார்கள். இதனை எதிர்த்து ராபர்ட் முகாபே தலைமையிலான அரசு, நிலச் சீர்திருத்தங்களைத் தொடங்கியவுடன், ஓரணியில் திரண்ட மேற்கத்திய நாடுகள் ஜிம்பாப்வேயின் பொருளாதாரத்தையே சீரழித்து அதல பாதாளத்தில் தள்ளி விட்டன.

இந்த நிலப் பறிமுதல் ஆப்பிரிக்காவைத் தாண்டி தற்போது மற்ற நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்து விட்டது. அண்மைக் காலமாக ஐக்கிய அரபு அமீரக நாடு, பாகிஸ்தானில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களைப் பாசுமதி அரிசி உற்பத்திக்கென வாங்கியுள்ளது. இதே நாடு கஜகஸ்தானிலும் நிலங்களை வாங்கப் போவதாகக் கூறி வருகிறது.

இன்றைய மறுகாலனியாதிக்க சூழலில், தங்களது உணவுத் தேவையையே நிறைவு செய்து கொள்ள முடியாமல் போராடிக் கொண்டிருக்கும் ஏழை நாட்டு மக்கள், இனி பணக்கார நாடுகளுக்கும் சேர்த்து உணவை உற்பத்தி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அறுபதாண்டுகளுக்கு முன்னர், எவ்வாறு இஸ்ரேல் பாலஸ்தீனர்களின் நிலங்களை எல்லாம் அபகரித்து பாலஸ்தீனர்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கியதோ, அதேபோன்று இன்று ஏகாதிபத்திய நாடுகள் ஆப்பிரிக்க மக்களின் நிலங்களை எல்லாம் ஆக்கிரமித்து ஆப்பிரிக்கர்களை உள்நாட்டு அகதிகளாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதற்கு அவர்கள் எடுத்திருக்கும் ஆயுதமே இந்த நிலக் கொள்ளை.

● மணி

## தில்லைக்கோயில் தீண்டாமைச் சுவர்:

# ‘மார்க்சிஸ்டு’ - கலைஞர் நிழற்சண்டை!

**தீட்சிதர்களைப் பார்ப்பனர் என்று சொல்வதையே எதிர்க்கும் மார்க்சிஸ்டுகள்; சொல்லில் தவிர, செயலில் பார்ப்பன எதிர்ப்பைக் காட்டத் துணியாத கருணாநிதி - இருவருக்கும் இடையில் நடப்பது வெறும் நிழற்சண்டைதான்.**

‘‘தில்லைக் கோயிலின் தீண்டாமைச் சுவரை அகற்ற வேண்டும்’’ என்று ஜூலை 14-ஆம் தேதியன்று மார்க்சிஸ்டு கட்சியினர் சிதம்பரத்தில் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஏப்ரல் மாதத்தில் வலது கம்யூனிஸ்டு கட்சி சிதம்பரத்தில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்திவிட்டது. புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும் இது குறித்து அறிக்கை விட்டுவிட்டார். அடுத்து பா.ஜ.க வின் போராட்ட அறிவிப்பும் வெளிவரக்கூடும். அவ்வளவு ஏன், தீண்டாமைச் சுவரை அகற்றக் கோரி தீட்சிதர்களும் போராடக்கூடும். சிங்களக் கடற்படையின் அட்டூழியத்தை எதிர்த்து திமுகவும் காவிரிக்காக காங்கிரசும் போராடுவதில்லையா, அதுபோலத்தான்.

ஒரு நியாயமான கோரிக்கையைப் பலரும் ஆதரிக்கும்போது நாம் மகிழ்ச்சி அடையவேண்டும் என்பது உண்மைதான். ஆனால், சிதம்பரம் பிரச்சினை தமிழகத்தின் சர்வகட்சிப் பிரச்சினையாக மாறிவருவதால், காவிரிப் பிரச்சினையின் கதி இதற்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற கவலை ஏற்படுகிறது. அதைத் தடுக்கும் பொருட்டு சில உண்மைகளை மீண்டும் மீண்டும் உரத்துக் கூறவேண்டியிருக்கிறது.

மார்க்சிஸ்டுகள் ஆர்ப்பாட்டம் நடத்திய மறுநாளே தமிழக அரசு ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டது. முதல்வரின் அறிவுரையின்படி தீட்சிதர்கள் வசமிருந்த சிதம்பரம் நடராசர் கோவில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், இதற்கெதிராக தீட்சிதர்கள் போட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், கோயில் கட்டுமானங்கள் எதையும் இடிக்கக் கூடாதென்று 15.3.2010 அன்று உத்தரவிட்டிருப்பதாகவும், சுவரை அகற்றக் கோரும் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் அரசு மேற்கொண்டுவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுதான் என்றும் கூறியது, அந்த செய்திக்குறிப்பு.

மறுநாள் காமராசர் பிறந்தநாள் விழாவில் பேசிய கருணாநிதி, ‘‘கேட்கக் கூடாததை வேண்டுமென்றே கேட்டு, ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதே இப்போராட்டத்தின் நோக்கம்’’ என்று சாடியது மட்டுமின்றி, ‘‘நந்தனார் இருந்தாரா, இல்லையா என்பதை பெரியாரிடம்தான் கேட்கவேண்டும்’’ என்று கூறி தீட்சிதர்களுக்கு ஆதரவாகப் பெரியாரை இழுத்து வந்து ஆஜராக்கினார்.

‘கோபுரத்தை தாங்குவது நீயா நானா’ என்று இரு பொம்மைகள் அடித்துக் கொள்வதை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பவர்கள் குனிந்து அஸ்திவாரத்தைப் பார்ப்பதில்லை. தீண்டாமைச் சுவரை இடிப்பதற்கு திடீரென்று களம் இறங்கியிருக்கும் மார்க்சிஸ்டு கட்சியின் யோக்கியதையை முதலில் பார்ப்போம். 2006 -ஆம் ஆண்டில் சிதம்பரம் நகரில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் (HRPC) அமைக்கப்பட்ட கூட்டுப் போராட்டக் குழுவிலிருந்து வெளியேறினார், மார்க்சிஸ்டு கட்சியின் நகரச் செயலர் மூசா. ‘தீட்சிதப் பார்ப்பனர்கள்’ என்று கூறுவது பிராமணர்களின் மனதைப் புண்படுத்தும் என்பதுதான் அவர் தெரிவித்த காரணம். பிறப்பால் இசுலாமியராக இருந்தபோதிலும் மூசாவுக்கு கோயிலுக்குள் பரிவட்டம் கட்டி மரியாதை செய்தார்கள் தீட்சிதர்கள்.

தமிழ் பாடும் உரிமையை நிலைநாட்டியதும், கோயிலை அரசு மேற்கொள்ளும் உத்தரவை உயர் நீதிமன்றத்தில் பெற்றதும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், ம.க.இ.க மற்றும் அதன் தோழமை அமைப்புகளும்



சிற்றம்பலத்தில் தமிழில் பாடி வழிபடலாம் என்ற தமிழக அரசின் ஆணையை நடைமுறைப்படுத்த மனித உரிமை பாதுகாப்பு மையமும், புரட்சிகர அமைப்புகளும் சிதம்பரம் நகரிலும், நடராசர் கோயிலின் உள்ளேயும் நடத்திய போராட்டம்.
(கோப்புப் படம்)



சிதம்பரம் நடராசர் கோயிலை மீண்டும் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவர பார்ப்பன ஜெயாவுடன் கூட்டணி கட்டிக் கொண்ட தீட்சிதர்கள்; பதவிப் பிச்சையைப் பெறுவதற்காக பார்ப்பன ஜெயாவுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள 'மார்க்சிஸ்டு'கள். (கோப்புப் படங்கள்)

தான் என்பதையும், இப்போராட்டத்தில் துவக்கமுதல் துணைநின்றவர்கள் முன்னாள் அமைச்சர் வீ.வீ.எஸ்., பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் போன்றோர் தான் என்பதையும் தமிழகம் அறியும்.

இருப்பினும் கடுகளவும் கூச்சமில்லாமல் இவை தங்களுடைய போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று சிதம்பரம் நகரில் சுவரொட்டி ஒட்டிக் கொண்டார்கள் மார்க்சிஸ்டுகள். அக்கட்சியின் வழக்குரைஞர் செந்தில்நாதன், தில்லைக்கோயில் வழக்குகள் பற்றி எழுதிய சிறு -லில், வழக்கை நடத்திய மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் பெயரை ஒரு விவரம் என்ற அடிப்படையில் கூடப் பதிவு செய்யாமல் இருட்டடிப்பு செய்தார்.

இப்போது தீண்டாமைச் சுவர் விவகாரத்தில் திடீரென்று தலை நுழைத்திருக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள். அவர்களுக்கு உச்ச நீதிமன்றத் தடை பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கோயிலை அரசு மேற்கொண்ட மறுகணமே தீட்சிதர்கள் அம்மாவின் காலில் விழுந்ததும், அம்மாவை சு.சாமி சந்தித்ததும், அவர்தான் இந்தத் தடையை வாங்கியவர் என்பதும் மார்க்சிஸ்டுகளுக்குத் தெரியுமா, தோழமைக் கட்சியாகிய தீட்சிதர்களை எதிர்த்து இப்படி ஒரு போராட்டம் நடத்துவதற்கு அம்மாவிடம் அவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்களா என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. ''சுவரை அரசு இடிக்காவிட்டால் நாங்கள் இடிப்போம்'' என்று சிதம்பரத்தில் வீரவசனம் பேசியிருக்கிறார்கள் மார்க்சிஸ்டு தலைவர்கள். 'புனிதமான' உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் மீது மார்க்சிஸ்டுகள் கடப்பாரையை இறக்கும் காட்சியையும், தீட்சிதப் பார்ப்பனர்களின் திருவுள்ளத்தைப் புண்படுத்தும் காட்சியையும் தரிசிப்பதற்கு நாம் ஆவலுடன் காத்திருக்கிறோம்.

மார்க்சிஸ்டுகள் கதையை விடவும் மாணப்பெரியது கலைஞரின் வசனம். தில்லைக் கோயிலை அரசாங்கத்தின் பிடியில் கொண்டு வந்துவிட்டதாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறார் முதல்வர். 'இந்தா பிடி' என்று தீட்சிதரின் குடுமியை அரசின் கையில் கொடுத்தது நீதிபதி பானுமதியின் தீர்ப்பு. ஆனால், அதனைப் பிடிக்கின்ற தைரியம் அரசுக்கு இல்லை. இந்தக் கணம் வரை கோயில் நகை, சொத்துக் கணக்கு முதல் கொத்துச் சாவி வரை எதையும் தீட்சிதர்கள் அரசிடம் ஒப்படைக்கவில்லை. அதைக் கேட்கின்ற தைரியமும் இந்த அரசுக்கு இல்லை. தீர்ப்பை அமலாக்க மறுக்கும் குற்றத்துக்காக தீட்சிதர்களை உள்ளே போட்டிருக்கலாம். கோயிலுக்கு வெளியே தூக்கியும் போட்டிருக்கலாம். கலைஞரின் அரசோ தீட்சிதர்களுக்கு எதிராக ஒரு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகூடப் போடவில்லை. கோயிலுக்குள் அறநிலையத் துறை அலுவலகம் திறந்துவிட்டது. ஆனால் வீட்டுச் சொந்தக்காரனைக் கண்டு நடுங்கும் குடித்தனக்காரனைப் போல அங்கே குடியிருக்கிறார், நிர்வாக அதிகாரி.

கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்கு வந்த மறுகணமே, தீண்டாமைச் சுவரை இடிக்கவேண்டுமென்று கோரினோம். உச்ச நீதிமன்றம் தடை விதிக்கும் வரை அரசு அசைந்து கொடுக்கவில்லை. இப்போது தடை உத்தரவைக் காட்டி, 'கேட்கக்கூடாததைக் கேட்கிறார்கள்' என்கிறார், கருணாநிதி.

'தமிழில் பாடி வழிபடவேண்டும்' என்ற கோரிக்கை கேட்கக் கூடிய கோரிக்கைதானே! கலைஞர் ஆட்சி செய்த 2000-ஆண்டில் திருவாசகம் பாடிய குற்றத்துக்காகத்தானே ஆறுமுகசாமியை அடித்து வீசினார்கள் தீட்சிதர்கள். இச்செய்தியை பார்ப்பனப் பத்திரிகையான கல்கி அன்று பிரசுரித்த பின்னரும், 'சூத்திர' தி.மு.க. அரசு செய்தது என்ன?

அதன்பின் இக்கோரிக்கைக்காக மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சிதம்பரத்தில் நடத்திய பொதுக்கூட்டங்களும், தமிழ் பாடச் சென்று கைதான நிகழ்வுகளும் எத்தனை? தமிழுக்கு ஆதரவாக உள்ளூர் தி.மு.க.வினர் ஒருவர்கூட குரல் எழுப்பியதில்லை என்பதே உண்மை. தமிழ் பாடும் போராட்டத்தின் வெற்றியைப் பாராட்டி திராவிடர் கழகத் தலைவர் வீரமணி திறக்க விரும்பிய கல்வெட்டில் அம்மாவட்டத்தின் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வத்தின் பெயர் இல்லை என்ற காரணத்துக்காக, அக்கல்வெட்டையே இரவோடு இரவாகப் பிடுங்கி எறிந்தனர் கழகக் கண்மணிகள் என்பதும் உண்மை.

தமிழ் பாடுவதற்கான அரசாணையாக இருக்கட்டும், கோயிலை அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததாக இருக்கட்டும்; இரண்டிலுமே



பார்ப்பன ஜெயாவின் ஆசியோடு உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசின் ஆணையை எதிர்க்கும் ப்ரமணிய வாமிக்கு தீட்சிதர்கள் செலுத்தும் மரியாதை. (கோப்புப் படம்)

தி.மு.க. அரசின் வலது கையைப் பிடித்து இழுத்து, கட்டை விரலில் மை தடவி, உத்தரவில் கைநாட்டுப் போட வைத்தது மனித உரிமைப் பாதுகாப்பு மையம். மக்கள் மன்றத்தில் அதற்கான அரசியல் நிர்ப்பந்தத்தை உருவாக்கியவை ம.க.இ.க வும் அதன் தோழமை அமைப்புகளும். இதுதான் உண்மை. 'கட்டைவிரல் கழக அரசுக்குச் சொந்தம்' என்கிறார் கலைஞர். அந்த உண்மையை நாம் மறுக்க முடியுமா என்ன? எனினும், இத்தனை ஆண்டுகளில் தி.மு.க. அரசு தீட்சிதர்களுக்கு எதிராகத் தனது சுண்டுவிரலைக்கூட உயர்த்தியதில்லை என்பதற்கான ஆதாரங்களை நாம் அடுக்கமுடியும்.

1997-இல் தி.மு.க. அரசு கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமித்தபோது, அவரது அலுவலகத்தையே நொறுக்கினார்கள் தீட்சிதர்கள். நிர்வாக அதிகாரி கொடுத்த புகாரை 'உண்மையல்ல' என்று தூக்கி வீசியது சிதம்பரம் போலீசு. ''ஐயோ பாவம் வருமானமில்லாத தீட்சிதர்கள்'' என்று சட்டமன்றத்தில் கண்ணீர் வடித்தார் காங்கிரசு எம்.எல்.ஏ அழகிரி. அடுத்த சில நாட்களில் தீட்சிதர்கள் போர்த்திய சால்வைக்குள் அடைக்கலமானார் கலைஞர்.

நகைக்களவு உள்ளிட்ட பல குற்றங்களை தீட்சிதர்கள் இழைத்திருக்கிறார்கள் என்று ஆதாரங்களுடன் கூறியது அறநிலையத் துறை. அவர்கள் மீது கிரிமினல் வழக்கு போட்டு உள்ளே தள்ளுமாறு தனது தீர்ப்பில் (1997) குறிப்பிட்டார், உயர் நீதிமன்ற நீதிபதி வெங்கடாசலய்யா. உள்ளே தள்ளுவது இருக்கட்டும். தி.மு.க. அரசு தீட்சிதர்கள் மீது பெயருக்கு ஒரு திருட்டு கேஸ் கூடப் போடவில்லை.

கோயிலுக்குள் கடந்த 25 ஆண்டுகளில் நடந்த மர்ம மரணங்கள், பாலியல் வன்முறைகள், களவுகள் ஆகியவை குறித்த ஆதாரங்களைக் கொடுத்தும் சிதம்பரம் போலீசு வழக்குப் பதிவு செய்ய மறுத்ததால், சி.பி.ஐ. விசாரணை கேட்டு மனித உரிமைப் பாதுகாப்பு மையம் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்திருக்கிறது. இதனை எதிர்த்து பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது தி.மு.க. அரசு. தி.மு.க. அரசின் வலது கை ஆறுமுகசாமிக்கு சன்மானம் கொடுத்து விளம்பரம் தேடுகிறது. இடது கையோ கள்ளத்தனமாக தீட்சிதர்களை அரவணைக்கிறது.

2008 -இல் அரசாணைப்படி தமிழ் பாடச் சென்ற ஆறுமுகசாமியை மட்டுமின்றி, மாவட்ட காவல் கண்காணிப்பாளரையே தீட்சிதர்கள் தாக்கியதை தொலைக்காட்சியில் நாடே பார்த்தது. அந்தத் தீட்சிதர்கள் தனிச்சமையல் செய்து சாப்பிட சிறையில் அடுப்பும் அரிசியும் கொடுத்து அவர்களுடைய பார்ப்பனப் புனிதத்தை பேணியது சிறை நிர்வாகம்.

பல கோடி மதிப்புள்ள கோயில் நிலத்தை தீட்சிதர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு திருட்டுத்தனமாக விற்றிருப்பதற்கான ஆவணங்களை தேடிப்பிடித்து புகார் கொடுத்தும், தி.மு.க. அரசு தீட்சிதர்கள் மீது வழக்கு போடவில்லை. அதற்கும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னர்தான், வேறு வழியில்லாமல் ஒரு வழக்கு பதிவு செய்தது போலீசு. இப்படி தீட்சிதர்களுக்கு எதிராகத் தனது சுண்டுவிரலைக்கூட அசைக்காத தி.மு.க. அரசு, கோயிலைக் கைப்பற்றி சாதனை படைத்துவிட்டதாகக் கட்டை விரலை உயர்த்திக் காட்டுகிறது.

இப்போது தீட்சிதர்களே எதிர்பார்த்திராத கோணத்தில் அவர்களுக்கு வக்காலத்து வாங்குகிறார் கலைஞர். ''பெரியபுராணம் கற்பனை, நந்தன் கதையே கட்டுக்கதை'' என்று பகுத்தறிவு விளக்கம் சொல்லி, தீட்சிதர்களைப் பாதுகாப்பதற்கு பெரியாரைத் துணைக்கு அழைக்கிறார்.

பெரியபுராணத்தில் சிவபெருமான் எப்போதுமே அந்தணன் வடிவில் வருவதும், குயவனும், வேடனும், சலவைத்தொழிலாளியுமான நாயன்மார்கள் அந்தணர்களுக்குப் பாதசேவை செய்வதும் கற்பனைகள் அல்ல, நிகழ்காலத்திலும் தொடரும் உண்மைகள். தீண்டாமை இன்றும் உண்மை. அந்த அளவில் நந்தன் கதையும் உண்மை. தீண்டாமைச் சுவரும் உண்மை.

பழங்கதை கிடக்கட்டும். புதுக்கதைக்கே வருவோம். 1880- களில் ''தில்லைக் கோயிலின் கருவறைக்கு எதிரே, நந்தனாரின் ஆள் உயரச்சிலை இருந்ததாகவும், அங்கே அமர்ந்துதான் கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனார் கீர்த்தனை எழுதினார்'' என்றும் உ.வே.சா. பதிவு செய்திருக்கிறார். 1935-இல் அந்தச் சிலையை அங்கே பார்த்திருப்பதாகவும், பின்னர் 1943 இல் அதனைக் காணவில்லை என்றும் முன்னாள் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரான பேராசிரியர் கொண்டல் சு.மகாதேவனும் எழுதியிருக்கிறார்.

இது அய்யரே கூறியிருக்கும் உண்மை என்பதால் கலைஞர் தைரியமாகப் பேசலாம். ராமர் பாலத்தையோ தீண்டாமைச் சுவரையோ இடிப்பது 'சாமி' குத்தம் ஆகிவிடும் என்று அவர் அஞ்சக்கூடும். அழிவு வேலை என்று தயங்கவும் கூடும். சிலை வைப்பதென்பது 'ஆக்கபூர்வமான' வேலை மட்டுமின்றி,ண கலைஞரின் மனதுக்கிசைந்த கலையும் அல்லவா? உளியின் ஓசையை அவர் உள்ளே எழுப்பட்டும். வெளியே, தீண்டாமைச் சுவரின் மீது கடப்பாரையின் இசையை நாம் எழுப்புவோம்.

● தொரட்டி

# திரவியம் தேடிப் போனவர்களின் துயரக்கதை

**சௌதி அரேபியாவில் வேலை பார்த்துவரும் ஆசிய நாட்டுத் தொழிலாளர்களின் துயரம் பற்றிய உண்மைச் சித்திரம்.**

**சௌ**தி அரேபியா-மன்னராட்சியிலேயே இன்னும் நீடித்திருக்கும் மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒன்று. அதன் பெரும்பகுதி பாலைவனம். இந்தியா அளவுக்கு பரப்பளவைக் கொண்டிருந்தாலும், மக்கள் தொகையோ ஒப்பீட்டளவில் வெகு சொற்பம். எந்தவித வளங்களும் இல்லாதிருந்த இந்நாடு, எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தலைகீழாய் மாற்றமடைந்தது.

அதுவரை ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நாடாக மட்டுமே அறியப்பட்ட சௌதி, எண்ணெய் பாயத் தொடங்கியவுடன் உள்கட்டுமானம், வளர்ச்சிப் பணிகள் என்று பெருமளவில் வேலை வாய்ப்புகளைக் கொண்ட நாடாக வளர்ந்தது. அந்த வகையில் எழுபதுகளின் பிற்பகுதியில் உடலுழைப்புக் கூலிகளாய் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டனர்.

சௌதியின் மக்கள் தொகைக்கு ஈடாக வெளிநாட்டவர்கள் வேலை செய்தாலும், தொழிலாளர்களின் உரிமை என்று எதையும் எதிர்பார்க்க முடியாது. சொந்த நாட்டு மக்களுக்கே கூட ஜனநாயக உரிமைகள் என்று எதுவுமில்லை. அரசியல் கட்சிகளுக்கு அனுமதியில்லை. கூட்டம் கூடிப் பேசும் உரிமையையோ, எழுதி வெளியிடும் உரிமையையோ நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. அச்சிடப்படும் -ல்கள் அனைத்தும் தணிக்கைக்குப் பிறகே வெளியிடப்படும். நாளிதழ்கள் தணிக்கை செய்யப்படுவதில்லை என்றாலும் அரசுக்கு எதிராக எதையும் எழுதிவிட முடியாது. மக்களும் அப்படியே பழக்கப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசருக்கோ, அரசுக்கோ எதிராக எதையாவது பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால்கூடச் சுற்றுமுற்றும் பார்த்துத் தாழ்ந்த குரலில் பேசுவதே மக்கள் வழக்கம்.

இந்நிலையில் வெளிநாட்டுக் கூலித் தொழிலாளர்கள் என்ன உரிமையை எதிர் பார்த்துவிட முடியும்?

குறைந்தபட்ச ஊதியம் என்று எந்த வரம்பும் இங்கு கிடையாது. நிறுவனத்திற்கு ஏற்றாற்போல், நாட்டிற்கேற்றாற் போல் ஊதிய ஒப்பந்தம் போடப்படும். ஒரே வேலையைச் செய்யும் இருவேறு நிறுவனங்களின் தொழிலாளிகளுக்கு ஒரே விதமான ஊதியமும் வசதிகளும் இருக்குமென எண்ணிவிட முடியாது. ஒரே வேலையைச் செய்யும் ஒரே நிறுவனத்தின் தொழிலாளிகளுக்குக்கூட நாட்டைப் பொருத்து ஊதியம் வேறுபடும்.

ஒரு துப்புரவுத் தொழிலாளி எகிப்தைச் சேர்ந்தவராக இருந்தால் 1200 ரியால் வரை (ஒரு ரியால் என்பது இந்திய மதிப்பில் தோராயமாக 12 ரூபாய்) ஊதியம் கிடைக்கும். பிலிப்பைனியாக இருந்தால் 900 ரியால், இந்தியனுக்கு 800 ரியால், பாகிஸ்தானி, இந்தோனேசியனுக்கு 600 ரியால், இலங்கை என்றால் 500 ரியால், பங்காளி (வங்கதேசம்) என்றால் 400 ரியால், தற்போது நேபாளத்திலிருந்து 300, 250 ரியாலுக்குகூட ஆட்கள் வருகிறார்கள். இது அந்தந்த நிறுவனங்களைப் பொறுத்து சற்றுக் கூடக்குறைய இருக்கும்.

ஊரில் மிச்சமிருக்கும் கொஞ்ச உடமைகளையும் விற்று, கடன் வாங்கி, தாலியை அடகுவைத்து பெரிய தொகையைத் தரகனிடம் தந்துவிட்டு, அதைவிடப் பெரிய கனவுடன் வந்திறங்கியதும் முள்ளாய்க் குத்துவது இந்த ஊதிய வேறுபாடுதான்.

ஊரில் தரப்படும் ஒப்பந்தத்திற்கும் (பெரும்பாலும் தருவதில்லை, வற்புறுத்திக் கேட்டால் காண்பிப்பார்

சௌதி அரேபியாவின் கொத்தடிமைகள்:
கொளுத்தும் வெய்யிலில் அற்ப ஊதியத்துடன் உழைத்து ஓடாய்த்தேயும் கட்டுமானத் தொழிலாளர்கள்.



கள்) சௌதியில் வந்திறங்கியதும் போடப்படும் ஒப்பந்தத்திற்கும் ஒரு தொடர்பும் இருக்காது. மொத்த ஊதியத்தில் 60 விழுக்காடுதான் அடிப்படை ஊதியமாக இருக்கும். எந்நேரம் அழைத்தாலும் வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கவேண்டும். எந்த ஊரில் என்றாலும் மறுப்புத் தெரிவிக்க முடியாது. வேறு வெளியாளிடமோ, வெளி நிறுவனங்களிலோ வேலை செய்யக் கூடாது போன்றவை பொதுவான விதிகள். ஊதிய உயர்வை சட்டபூர்வமாகக் கோரமுடியாது. விண்ணப்பிக்கலாம் அவ்வளவுதான். உபரி வேலை செய்தால் அடிப்படை ஊதியத்திலிருந்து நேரக் கணக்குப்படி கூலி தருவார்கள். வேலை நாளாக இருந்தால் ஒன்றரை மடங்கு என்றும் விடுமுறை நாளாக இருந்தால் இரண்டு மடங்கு என்றும் சட்டத்தில் உண்டு. ஆனால் வெகு சில நிறுவனங்களைத் தவிர, ஏனையவை இதைக் கண்டு கொள்வதில்லை.

சௌதியில் பரிதாபத்தை வரவழைக்கும் நிலையில் இருப்பவர்களில் முதன்மையானவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள்தான். 12 மணி நேர வேலை கட்டாயம். ஏனைய தொழிலாளர்களோடு ஒப்பிட்டால் குறைந்த ஊதியம். இங்கு அடிக்கும் வெயிலில் பத்து நிமிடம் நின்றாலே தோலில் சூடு தாங்காமல் ஒருவித அரிப்பு வந்துவிடும். அந்த வெயிலில் காலை முதல் மாலை வரை நின்று வேலை செய்ய வேண்டும். நகரத்தில் எங்காவது ஒதுக்குப்புறத்தில் தங்குமிடம் இருப்பதால், போய்வருவதற்கு இரண்டு மணி நேரம் பிடிக்கும். இந்தக் களைப்புகளோடு அறைக்கு வந்தால் ஒரு அறையில் ஆறு பேர் முதல் பத்துப் பேர் வரை அடைக்கப் பட்டிருப்பர்.

தொழிற்சங்கம் போன்றவற்றை இங்கு ஏற்படுத்த முடியாது என்பது ஒருபுறமிருந்தாலும், பாதிக்கப்படும் ஒரு தொழிலாளிக்காக இங்கு யாரும் பரிந்து பேசவும் முடியாது. வேறு எந்த வளைகுடா நாட்டிலும் இல்லாத பிரச்சனை இது.

வளைகுடா பிராந்தியத்திலுள்ள துபாயில் தொழிலாளர்கள் போராடி மதியம் 11 மணியிலிருந்து 3 மணி வரை கட்டுமானப் பணிகள் நடைபெறக்கூடாது என்று ஆணை பெற்றிருக்கிறார்கள். மஸ்கட்டில் பாதுகாப்புச் சாதனங்கள் என்ற பெயரில் தரமற்ற எடை கூடிய உபகரணங்களைத் தொழிலாளர்களிடம் திணிக்காமல் தரமான, எடைகுறைந்த பாதுகாப்பு சாதனங்களை வழங்க வேண்டும் என்று உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். இவை சாதாரணமான சிறிய சலுகைகள்தான் என்றாலும், இவற்றை வெளிநாட்டுத் தொழிலாளர்கள் போராடிப் பெற்றிருக்கிறார்கள் என்பது முக்கியமானது. ஆனால், சௌதியைப் பொருத்தவரை இதைப் போன்ற எதையும் எதிர்பார்க்க முடியாது.

தொழிலாளர் நீதிமன்றங்கள் தொழிலாளிக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் எழும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை கடைகளிலோ அல்லது தனிப்பட்ட சௌதிகளிடமோ வேலை செய்பவர்களுக்குத்தான் தீர்வு சொல்லும் அளவுக்கு அதிகாரம் பெற்றிருக்கின்றன. பெரிய நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் குறித்த புகார்களை எடுத்துக் கொள்வதில்லை. தொழிலாளிகளிடமே நிர்வாகத்திற்குப் பணிந்து செல்லுமாறு அறிவுரை கூறுகின்றன.

அண்மையில் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி, மருத்துவ விடுப்பில் இருந்த 15 நாளுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று அஃப்ராஸ் எனும் நிறுவனத்திற்கு எதிராக (மருத்துவ விடுப்பிற்கு ஊதியம் வழங்கவேண்டும் என விதி உண்டு) அளித்த புகாரை தொழிலாளர் நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட, அதையும் புகாராகச் சேர்த்து அமீர் நீதிமன்றத்தில் (தொழிலாளர் நீதிமன்றத்திற்கு மேல் நீதிமன்றம்) அளிக்க அங்கும் ஏற்கப்படவில்லை. ஆனால், அதே நாளின் இரவில் யாருக்கும் தெரியாமல், அவரது சொந்த உடமைகளைக்கூட எடுத்துக்கொள்ள அனுமதிக்காமல், கொடுக்க வேண்டிய ஊதியமோ, எட்டு ஆண்டுகள் வேலை செய்ததற்கான பலன்களோ எதுவுமின்றி ஊருக்குத் துரத்தப்பட்டார்.

உழைப்பின் களைப்பில், கால்நீட்டிப் படுக்கக்கூட இடமின்றி சிறிய அறையில் முடங்கும் தொழிலாளர்களின் அவலம்.



தூதரக அலுவலகங்களும், பெயருக்குத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியத் தூதரக அலுவலகங்களில் தொழிலாளர்களை அலட்சியமும் அவமதிப்பும்தான் வரவேற்கும். கடவுச்சீட்டு புதுப்பிப்பதைத் தவிர, வேறெதற்கும் அங்கு செல்வதில் ஒரு பயனும் இல்லை. இந்தியத் தூதரகம் மட்டுமல்ல; இங்கு எந்தவொரு ஆசிய நாட்டுத் தூதரகமும் இப்படித்தான் நடந்து கொள்கின்றன.

''ஓவர் டைம்'' என அழைக்கப்படும் உபரி வேலை என்பது சௌதியைப் பொருத்தவரை ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகவும் முக்கியமானது. ஊரில் வாங்கிய கடன், அதற்கான வட்டி, குடும்பச் செலவுகள், குழந்தைகளின் கல்வி, மருத்துவம் என அனைத்தையும் சமாளிக்க சம்பளம் மட்டும் போதுமானதாக இருக்காது. அவர்



**இன்று வளைகுடா வெயிலில் சர்வாதிகார ஷேக்குகளிடம் வதைபடும் தொழிலாளிகள், தேசிய இன வேறுபாடு, மத வேறுபாடு இன்றி வர்க்கமாய் ஒன்றிணைந்து ஏகாதிபத்தியக் கொழுப்பில் ஆட்டம் போடும் ஷேக்குகளை வஞ்சம் தீர்ப்பார்கள்.**

களின் தேவைக்கு எல்லாம் உபரி வேலைதான் ஒரே வழி. ஆனால், உபரி வேலைக்குச் சட்டப்படியான ஊதியத்தை தராமல் ஏமாற்றுகிறார்கள். அடிமையைப் போல் நடத்துகிறார்கள்.

ஓய்வு வேண்டும் என உடல் கெஞ்சினாலும் தொழிலாளர்கள் உபரி வேலைக்குச் செல்ல ஆயத்தமாய் இருப்பார்கள். தொழிலாளர்கள் தங்கியுள்ள அறையில் இருந்து ஆசைகளின் அசையில் கனன்று கொண்டிருப்பதைவிட, வேலைக்குச் சென்று அந்த வியர்வையை தெளித்து வெம்மையை ஆற்றுப்படுத்துவோம் என நினைப்பதும் ஒரு காரணம்.

ஒப்பந்த நிறுவனங்கள் என்று சில இருக்கின்றன. பெரிய நிறுவனங்களிடம் ஒப்பந்த அடிப்படையில் வேலைகளைப் பெற்றுத் தங்களது தொழிலாளர்களை வைத்து செய்து முடிப்பது இந்த ஒப்பந்த நிறுவனங்களின் பணி. இந்த நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்குத் தவிர்க்க முடியாத தருணங்களைத் தவிர உபரி வேலை கொடுப்பதில்லை. அதற்குப் பதிலாக இவர்கள் ''டபுள் டூட்டி'' எனும் ஆயுதத்தை கையில் வைத்திருக்கிறார்கள்.

அதாவது, ஒரு இடத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியை எட்டு மணி நேரம் முடிந்ததும் வேறொரு இடத்தில் கொண்டு விட்டுவிடுவார்கள், அங்கு இன்னொரு எட்டு மணி நேரம் வேலை பார்க்க வேண்டும். சில நாட்களில் சில மணி நேரம் உபரி வேலை என்பதைவிட, மாதத்தில் எல்லா நாளும் வேலை, இரட்டைச் சம்பளம் என்று கூறிச் சம்மதிக்க வைக்கிறார்கள். ஆனால், முதல் வேலைக்கு மட்டுமே ஒப்பந்தப்படி முழுச் சம்பளம். இரண்டாவது வேலைக்கு பாதிச் சம்பளம் மட்டுமே தரப்படும்.

இது போன்ற உபரி வேலை கிடைக்காதவர்கள் அல்லது விருப்பமில்லாதவர்களில் எட்டு மணி நேர வேலை போதும், வேறு வேலை வேண்டாம் எனக் கருதுபவர்கள் வெகு சிலரே. ஏனையவர்கள் செய்யாத வேலை இல்லை எனும் அளவுக்கு எல்லா வேலைகளையும் செய்கின்றனர். இங்கு ஒரு லிட்டர் பெட்ரோல் 50 ஹலாலா தான் (அரை ரியால்). ஆனால், ஒரு லிட்டர் தண்ணீர் இரண்டு ரியால். இதனால் மொத்தமாக தண்ணீர் பாட்டில்களை வாங்கி வைத்துக் கொண்டு சாலைகளில், சந்திப்புகளில், கடைவீதிகளில் இன்னும் செல்ல முடிந்த அத்தனை இடங்களுக்கும் சென்று வண்டிகளில் செல்வோர், நடந்து செல்வோர் என அத்தனை பேரிடமும் தண்ணீர் புட்டிகளை நீட்டி, வாங்கிவிட மாட்டார்களா எனும் ஏக்கத்துடன் விற்றுக் கொண்டிருப்போர் ஏராளம்.

வியர்த்து வழியும் முகம், ஒரு கையில் பை, மறு கையில் போதிய நீளமுள்ள முனையில் வளைந்த ஒரு கம்பி இந்த அடையாளங்களுடன் சாலையில் அநேகரைச் சந்திக்கலாம். குப்பைத் தொட்டிகளைக்கூட விட்டு வைக்காமல் கிளறி பெப்ஸி டப்பாக்களைத் தேடிச் சேகரித்து விற்கும் இவர்களும் ஏதோ ஒரு நிறுவனத்தில் எட்டு மணி நேர வேலையை முடித்து விட்டு உபரி வேலையாய் அலைபவர்கள் தாம்.

இன்னும், துணி துவைத்துக் கொடுப்பவர்கள், முடி திருத்துவோர், தொலைபேசி அட்டை விற்பவர்கள், ஓட்டுநர்கள், கணிணி வேலை செய்பவர்கள், சமையல் வேலை செய்பவர்கள், கடைகளில் வேலை செய்வோர் என்று என்னென்ன வழிகளில் முடியுமோ அதிலெல்லாம் முனைந்து, முயன்று தங்களின் எட்டு மணி நேர வேலைக்குப் பிறகு கரணம் அடித்துக்கொண்டிருக்கும் எவரையும் சந்தித்து, நாளின் பெரும்பாலான நேரத்தில் உழைத்தே தேய்ந்து கொண்டிருக்கிறீர்களே, உங்களைச் ற்றிநிகழ்பவை குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டாமா என்றால், ஒரு அசட்டுச் சிரிப்போடு ''ஊரில் என்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கிறதே'' என்பதுதான் பதிலாக இருக்கும்.

முன்பொருமுறை அந்நாட்டில் தோன்றிய கம்யூனிஸ்ட் கட்சியை வெகு சுலபமாக நசுக்கிவிட்டது சௌதி அரசு. இனியொருமுறை கம்யூனிச இயக்கம் சௌதி மண்ணில் தன்னைப் புதுப்பிக்கும் போது, அதை ஒடுக்குவது அரசுக்கு அவ்வளவு சுலபமாக இருக்கப் போவதில்லை. இன்று வளைகுடா வெயிலில் சர்வாதிகார ஷேக்குகளிடம் வதைபடும் தொழிலாளிகள், தேசிய இன வேறுபாடு, மத வேறுபாடு இன்றி வர்க்கமாய் ஒன்றிணைந்து ஏகாதிபத்தியக் கொழுப்பில் ஆட்டம் போடும் ஷேக்குகளை வஞ்சம் தீர்ப்பார்கள். தொழிலாளிகளின் வர்க்க ஒன்றிணைப்பில் வளைகுடாவின் விதி மாற்றி எழுதப்படும். அந்த நாளுக்காக நாங்கள் காத்திருப்போம், வேலை செய்வோம்.

– வினவு நிருபர், வளைகுடாவிலிருந்து.

(வினவு இணையதளத்தில் வெளிவந்த கட்டுரையின் ருக்கம்)

## பெட்ரோலியப் பொருட்கள் விலையேற்றம்:

# தடையற்ற கொள்ளைக்கு அனுமதி!

### இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்களின் விலைகளைச் சந்தைச் சூதாட்டம் தீர்மானிப்பதற்கு இருந்து வந்த பெயரளவிலான தடையும் நீக்கப்பட்டு விட்டது.

**கா**ங்கிர கூட்டணி ஆட்சி கடந்த ஆறு மாதங்களுக்குள் மூன்றாம் முறையாக பெட்ரோல்-டீசலின் விலையை உயர்த்தியிருக்கிறது. அதே சமயம், தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள விலையேற்றத்தை வழக்கமான ஒன்றாக எடுத்துக் கொண்டுவிட முடியாது.

''பெட்ரோலியப் பொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதில் அர குறுக்கிடக் கூடாது; அதனைச் சந்தைதான் தீர்மானிக்க வேண்டும்'' என்ற தாராளமயக் கொள்கைப்படி இவ்விலையேற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இக்கொள்கையை, காங்கிர கூட்டணி ஆட்சி 2010-இல் நடைமுறைப்படுத்தத் துணிந்திருக்கிறது. இதன்படி, பெட்ரோலுக்கு வழங்கப்பட்டு வந்த 'மானியத்தை' முற்றிலுமாக நிறுத்திவிடுவதோடு, இனி அதனின் விலை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சர்வதேசச் சந்தை நிலவரத்துக்கு ஏற்பத் தீர்மானிக்கப்படும் என்றும்; டீசலுக்கு வழங்கப்பட்டு வரும் ''மானியத்தையும்'' வெகுவிரைவில் நிறுத்தப் போவதாகவும் காங்கிர கூட்டணி ஆட்சி அறிவித்திருக்கிறது. இதோடு திருப்தியடையாத தாராளமயத் தீவிரவாதிகளோ, சமையல் எரிவாயுவுக்கும், மண்ணெண்ணெய்க்கும் வழங்கப்படும் 'மானியத்தையும்' அடியோடு உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கூப்பாடு போட்டு வருகிறார்கள்.

மன்மோகன் சிங் கும்பல் இவ்விலை உயர்வை நியாயப்படுத்தச் சொல்லிவரும் காரணங்கள் - சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துக் கொண்டே போவது; பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சந்தை விலைக்குக் குறைவாக பெட்ரோல்-டீசல்-மண்ணெண்ணெய்-சமையல் எரிவாயுவை விற்பதால் சந்தித்து வரும் நட்டம்; அர , பெட்ரோலியப் பொருட்களுக்கு அளித்து வரும் பல ஆயிரம் கோடி ரூபாய் மானியத்தால் சந்தித்து வரும் பற்றாக்குறை - யாவும் உளுத்துப் போன பொய்கள். எனினும், இந்தப் பொய்களை, பொருளாதாரப் புள்ளிவிவரங்களைத் திரித்துப் புரட்டுவதன் மூலம் உண்மையைப் போல விற்று, படித்தவர்களைக் கூட ஏமாற்றிவருகிறது, மன்மோகன் சிங் அர .

''பெட்ரோல்-டீசல் விலையை, இனி உங்களைப் போன்ற முதலாளிகள் தீர்மானிக்க அனுமதித்து விட்டேனே, மகிழ்ச்சிதானே!'' என ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானியிடம் கேட்கிறாரோ மன்மோகன் சிங்!



**கச்சா எண்ணெய் விலையேற்றம், முதல் மோசடி:**

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலையை தேவைக்கும் (demand) வரத்துக்கும் (supply) இடையேயான பொருளாதார விதி எதுவும் தீர்மானிக்கவில்லை. மாறாக, கச்சா எண்ணெய் சந்தையைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கோல்டுமேன் சாக்ஸ், மார்கன் ஸ்டான்லி, சிட்டி குரூப், ஜே.பி. மார்கன் சேஸ் ஆகிய நான்கு அமெரிக்க முதலீட்டு வங்கிகள் நடத்தும் சூதாட்டம்தான் தீர்மானிக்கின்றன. தாராளமயம், இச்சூதாட்டத்திற்குச் சந்தை விதி என்ற பெயரைச் சூட்டிப் புனிதப்படுத்திவிடுகிறது.

மே 2009 நிலவரத்தின்படி, சர்வதேச சந்தையில் ரூ.21.43 என்றிருந்த ஒரு லிட்டர் கச்சா எண்ணெயின் விலை, தற்பொழுது ரூ.22.13 ஆக அதிகரித்திருக்கிறது. சர்வதேசச் சந்தையில் கடந்த ஓராண்டிற்குள் ஒரு லிட்டர் கச்சா எண்ணெயின் விலை பெறும் 70 கா கள்தான் அதிகரித்திருக்கும் பொழுது, காங்கிர கூட்டணி ஆட்சி கடந்த ஆறு மாதங்களுக்குள் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலையை ரூ.6.44; ஒரு லிட்டர் டீசலின் விலையை ரூ.4.55; ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலையை ரூ.3/-; ஒரு உருளை சமையல் எரிவாயுவின் விலையை ரூ.35/- என்ற கணக்கில் அதிகரித்திருக்கிறது. கச்சா எண்ணெயைச் த்திகரிக்க ஆகும் செலவைச் சேர்த்தால் கூட, இந்த விலையேற்றத்தைப் பகற்கொள்ளை என அடித்துக் கூறலாம்.

பெட்ரோலியத்துறை அமைச்சர் முரளி தியோரா கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிவித்தபடி, வரிவிதிப்புக்கு முன்பாக ஒரு லிட்டர் பெட்ரோலின் அடக்க விலை (இலாபத்தையும் சேர்த்து) ரூ.23.44-தான். அன்றைய சர்வதேச நிலவரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் கூட, இந்தியாவில் ஒரு லிட்டர் பெட்

ரோலை ரூ.30.20-க்கு இலாபத்தோடு விற்க முடியும். ஆனால், இந்தியாவில் ஆறு மாதத்திற்கு முன்பே ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ஐம்பது ரூபாயைத் தொட்டு விட்டது. இதிலிருந்தே, பெட்ரோல், டீசல் போன்ற பெட்ரோலியப் பொருட்கள் இந்தியாவில் சர்வ தேச சந்தை விலையை விடக் குறைவாகவும், நட்டத்திலும் விற்கப்பட்டு வருவதாகக் கூறப்படுவது முழுப் பொய் எனப் புரிந்து கொள்ள முடியும்.

**எண்ணெய் நிறுவனங்களின் நட்டம், இரண்டாவது மோசடி:**

இந்தியா தனக்குத் தேவைப்படும் கச்சா எண்ணெயில் 85 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்தாலும், கச்சா எண்ணெயிலிருந்து த்திகரித்துப் பெறப்படும் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இல்லை. இப்பெட்ரோலியப் பொருட்கள் உள்நாட்டுத் தேவைக்கும் அதிகமாகவே பொதுத்துறை மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களைப் பொருத்தவரை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகிய நான்கு பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்து விற்றால் என்ன விலைக்கு விற்க முடியுமோ அந்த விலைக்கு விற்று இலாபத்தை அள்ள முடியவில்லை என்பதைத்தான் நட்டம் நட்டமென அரற்றிக் கொண்டு திரிகின்றன.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருளை, இறக்குமதி செய்யப்படும் பொருளாகக் காட்டி விற்பனை செய்ய வேண்டும் என்பது பேராசை பிடித்த ஏமாற்றுப் பேர்வழியின் மனோநிலை; உள்நாட்டில் உற்பத்தியான பொருளை, சர்வதேச விலைக்கு விற்க முடியாததை, இலாபம் குறைவதாகக் காட்டலாமே தவிர, அதனை நட்டம் நட்டமென ஊதிப் பெருக்குவதைப் பொருளாதார மோசடி என்றுதான் கூற முடியும்.

தனியார்மயம்-தாராளமயத்தின் முடிசூடா மன்னனாக விளங்கும் அமெரிக்காவிலேயே ஒரு லிட்டர் பெட்ரோலின் விலைரூ.32.76 விற்கப்படும் பொழுது, இந்தியாவில் பெட்ரோல் ரூ.52.13க்கு (பழைய விலை) விற்கப்பட்டது. அமெரிக்காவில் ஒரு லிட்டர் டீசலின் விலை ரூ.34.12-க்கு விற்கப்படும் பொழுது, இந்தியாவில் ஒரு லிட்டர் டீசல் ரூ.38.05 (பழைய விலை) விற்கப்பட்டது. உண்மை இப்படியிருக்கும் பொழுது, இந்தியாவில் பெட்ரோலும், டீசலும் குறைவான விலைக்கு விற்கப்படுவதாக நடத்தப்படும் பிரச்சாரம், கோயபல்சைக் கூடத் தனது கல்லறையில் நெளியச் செய்துவிடும்.

பெட்ரோலிய பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களுள் ஒன்றான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பெட்ரோலியப் பொருட்களை சர்வதேசச் சந்தை விலைக்குக் 'குறைவாக' விற்றாலும் கூட,




2009-10 ஆம் ஆண்டில் 10,998 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியுள்ளது; மைய அரக்கு இலாப ஈவுத்தொகையாக ஏறத்தாழ 3,000 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறது. இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனமும்; பாரத் பெட்ரோலியக் கழகமும் சேர்ந்து ஏப்.2009 தொடங்கி டிச-2009-க்குள் அடைந்துள்ள இலாபம் 1,378 கோடி ரூபாய். ஒவ்வொரு ஆண்டும் இப்படி பல ஆயிரம் கோடி ரூபாய்களை இலாபமாக ஈட்டும் இந்த நிறுவனங்களை, சர்வதேச விலைக்குப் பெட்ரோலியப் பொருட்களை விற்க அனுமதிக்க வேண்டும் எனக் கோருவதன் பொருள், இந்திய மக்களைப் பகற்கொள்ளையடிக்க அனுமதிக்க வேண்டும் என்பது தவிர வேறென்ன?

**அரசின் மானியம், மூன்றாவது மோசடி:**

பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் பல்வேறு வகையான வரிகள் மூலம் மைய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் கிடைத்துவரும் வருமானத்தையும்; மைய அரசு பெட்ரோலியப் பொருட்களுக்குத் தருவதாகக் கூறும் மானியத்தையும் ஒப்பிட்டு பார்த்தால், இம்மோசடியைப் பாமரன் கூட எளிதாகப் புரிந்து கொண்டுவிடலாம்.

பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரி, ங்கவரி, உற்பத்தி வரி மற்றும் பிற வரிகளின் மூலம் 2006-07 ஆம் ஆண்டில் மைய மற்றும் மாநில அரசுகளுக்குக் கிடைத்த வருமானம் 1,37,103 கோடி ரூபாய்; அதே ஆண்டில் மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் மைய அரசு வழங்கிய மானியம் 2,524 கோடி ரூபாய்தான். அதே ஆண்டில், பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயுவை சர்வதேசச் சந்தை விலைக்குக் 'குறைவாக' விற்றதால் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அடைந்ததாகக் கூறப்படும் 'நட்டம்' 49,387 கோடி ரூபாய்.

இந்த ''நட்டத்தையும்'' அரசு அளித்துள்ள மானியத்தையும் கூட்டி (51,911 கோடி ரூபாய்), பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் மைய-மாநில அரசுகளுக்குக் கிடைத்த வரி வருமானத்திலிருந்து கழித்தால், ஆளும் கும்பலுக்குக் கிடைத்த நிகர வருமானம் 85,192 கோடி ரூபாய். இந்த நிகர வருமானம் 2007-08 ஆம் ஆண்டில் 68,002 கோடி; 2008-09 ஆம் ஆண்டில் 39,283 கோடி ரூபாய்.

பொதுத்துறை நிறுவனங்கள் அடைந்து வருவதாகக் கூறப்படும் கற்பனையான நட்டத்தை சேர்க்காவிட்டால், இந்த மூன்று ஆண்டுகளில் மைய அரசுக்கு மட்டும் கிடைத்துள்ள மொத்த நிகர வரி வருமானம் 2,30,593 கோடி ரூபாய். விலையேற்றத்திற்குப் பிறகு, இந்த ஆண்டில் மட்டும் (2010-11) மைய-மாநில அரசுகளுக்குக் கிடைக்கக்கூடிய வரி வருமானம் 1,20,000 கோடி ரூபாய்.

பெட்ரோலியப் பொருட்கள் நவீன சமூகப் பொருளாதார வாழ்க்கையின் என்ஜினாக இருப்பதால், அத்துறையை மைய-மாநில அரசுகள் பொன்முட்டையிடும் வாத்தாகக் கருதுகின்றன. அதனாலேயே, இப்பொருட்களின் மீது விதிக்கப்படும் அபரிதமான வரிகளைச் சிறிதளவு கூடக் குறைத்துக்கொள்ள மறுக்கின்றன.

''பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைத்தால், மாநில அரசின் நிதி நிலை மிகவும் பாதிக்கும்'' எனக் கூறும் தமிழக முதல்வர் கருணாநிதி, தமிழகத்தில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகளை வாரி வழங்கும் பொழுது, அரசின் நிதிநிலை பற்றிக் கவலை கொள்வதில்லை.

இவ்விலையேற்றத்தால், பெட்ரோலியப் பொருட்களுக்கு வழங்கப்படும் 'மானியத்தில்' 22,000 கோடி ரூபாய் மிச்சமாகும் என மைய அரசு கணக்குக் காட்டியிருக்கிறது. பொதுமக்களின் நலனுக்காக ஒரு 22,000 கோடி ரூபாயை விட்டுக் கொடுக்க மறுக்கும் மைய அரசு, இந்த ஆண்டு பட்ஜெட்டில் வருமான வரி கட்டும் கனவான்களுக்கு வாரிவழங்கியுள்ள மானியம் 26,000 கோடி ரூபாய்; சுங்கவரி மற்றும் கலால்வரி விலக்குகளின் மூலம் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு அளித்துள்ள மானியம் 4,19,786 கோடி ரூபாய். அவர்களுக்கு மானியம் அளித்தால் ''வளர்ச்சியாம்'' பொது மக்களுக்கு 'மானியம்' அளித்தால் பற்றாக்குறையாம். இம்முரண்பாட்டைப் பொருளாதார நிபுணத்துவம் என்பதா? இல்லை, பித்தலாட்டம் என்பதா?

''பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையைத் தீர்மானிப்பதில் இனி அரசு தலையிடாது'' என மைய அரசு அறிவித்த மறுநிமிடமே, அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் நாடெங்கும் 5,000 பெட்ரோல் பங்குகளைத் திறக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. இன்று பெட்ரோல் பங்குகளைத் திறக்க ஆர்வம் காட்டும் இதே அம்பானிதான், இரண்டு-மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, பெட்ரோல்-டீசல் விலைகளைத் தீர்மானிப்பதில் அரசு தலையீடு செய்வதைக் கண்டித்து, அப்பொழுது தான் நடத்தி வந்த 750 பெட்ரோல் பங்குகளை இழுத்து மூடினார். எனவே, தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலையேற்றத்தில், அரசின் கொள்ளை மட்டுமல்ல, அம்பானி, எஸ்ஸார் போன்ற தனியார் முதலாளிகளின் கொள்ளையும் அடங்கியிருக்கிறது.

● செல்வம்

# ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகியைச் சிறையிலடைத்த வழக்குரைஞர்களின் போராட்டம்!

**தூ**த்துக்குடியையே நஞ்சாக்கிவரும் வேதாந்தா நிறுவனத்தின் துணை நிறுவனமான ''ஸ்டெர்லைட் தாமிரா'' உருக்காலை நிறுவனம், வரிஏய்ப்பு மூலம் ரூ.750 கோடியைச் சுருட்டியுள்ள விவகாரம் அண்மையில் வெளிவந்துள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையில் தாமிரக் கம்பிகள், தாமிர கேத்தோடுகள் முதலானவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக தாதுப் பொருளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, அதே நாடுகளுக்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்தால் இறக்குமதி வரியில் சலுகை வழங்கப்படும். ஆனால் இந்தியாவில் தாமிரப் பொருட்களுக்கு தேவை அதிகமிருப்பதால், உள்நாட்டிலேயே அவற்றை இரகசியமாக விற்றுவிட்டு, ஏற்றுமதி செய்ததாகக் கணக்கு காட்டி இந்நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ஏறத்தாழ ரூ.750 கோடிக்கு இறக்குமதி வரிஏய்ப்பு செய்துள்ளது.



மத்திய சுங்க மற்றும் கலால் வரித்துறையினர் திடீர் சோதனை நடத்தி வரிஏய்ப்பு தொடர்பான ஆவணங்களைக் கைப்பற்றி, ஸ்டெர்லைட்டின் துணைத்தலைவர் வரதராஜனை கடந்த 24 -ஆம் தேதி தூத்துக்குடி நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்தனர். இச்செய்தியறிந்து மனித உரிமை பாதுகாப்பு மையம், நாம் தமிழர் இயக்கம் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் நீதிமன்றத்தில் திரண்டு வரதராஜனை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யக் கோரி முழக்கமிட்டனர். சமூக உணர்வு கொண்ட வழக்குரைஞர்களின் போராட்டக்குரல் எங்கும் எதிரொலிக்க, வரதராஜனைச் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். வெளியே கொண்டு வந்தபோது, வழக்குரைஞர்கள் முழக்கமிட்டவாறே மோசடி மன்னன் வரதராஜனை அடிக்க முயன்றனர். பெருமுயற்சிக்குப் பின்னரே போலீசார் அவனை மீட்டனர். இந்த வழக்கிற்காக இலண்டனில் இருக்கும் வேதாந்தா நிறுவனத்தின் தலைவர் அனில் அகர்வாலைக் கைது செய்து, இந்த நச்சு ஆலையை முடக்கக் கோரி மக்களைத் திரட்டி பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வழக்குரைஞர்கள் ஆயத்தமாகி வருகின்றனர்.

தகவல்:
மனித உரிமை பாதுகாப்பு மையம்,
தூத்துக்குடி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

நம் நாட்டில் வறுமையில் இருந்து மீள முடியாமல் உழல்வோரைத் தீர்மானிப்பதில் சாதி முக்கியப் பங்காற்றுகிறது. ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர்தான், வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கின்றனர். வறுமை நிலையில் வாழும் இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களில் 66% பேர் உச்சக்கட்ட வறுமையில் உள்ளனர். இது, பிற்படுத்தப்பட்ட சாதியினரில் 58%மாக உள்ளது. இது தவிர, மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினரில் 81% பேர் வறுமையில் உள்ளனர். இவர்களது வறுமை நிலையானது, தொடர்ந்து 16 ஆண்டுகள் உள்நாட்டுப் போரால் சின்னாபின்னமாக்கப்பட்ட மொசாம்பிக் நாட்டு மக்களின் வறுமை நிலையைவிட மோசமானதாக உள்ளது.

உலக மனிதவள மேம்பாட்டு தரப் பட்டியலிலும் இந்தியா, மிகவும் பின்தங்கிய நிலையில்தான் உள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் போதிய உடல் வளர்ச்சியின்மை காரணமாக பிரசவத்தின் போது உயிரிழக்கும் பெண்களின் எண்ணிக்கையில் உலகிலேயே இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது. நோஞ்சான் மக்களை அதிகமாகக் கொண்டுள்ள நாடும் இந்தியாதான். இந்தியாவின் கிராமப்புறத்தில் வாழும் சரி பாதிக் குழந்தைகள் எலும்பும் தோலுமாகவும் உடல் எடை குறைந்தவர்களாகவும் உள்ளனர். ஐந்து வயதுக்குட்பட்ட இந்தியக் குழந்தைகளில் 43% பேர் ஊட்டச் சத்தின்மையால் உடல் வளர்ச்சி குன்றிப் போய், ஆப்பிரிக்காவின் தெற்கு சஹாரா பாலைவனப் பிரதேசங்களை விட மோசமான நிலையில் உள்ளனர். நாட்டின் எதிர்காலம் எனப்படும் குழந்தைகளில் பாதிப்பேருக்கு நிகழ்காலமே கேள்விக்குறியாய் உள்ளது. இதனை மொத்தமாக தொகுத்து, உலக வங்கி இப்படிச் சான்றிதழ் அளிக்கிறது: "உலகின் எடை குறைவான குழந்தைகளில் 49% பேரும், உடல் வளர்ச்சி தடைபட்ட குழந்தைகளில் 34% பேரும், நோய்வாய்ப்பட்ட குழந்தைகளில் 46% பேரும் வாழும் இடம் இந்தியா". மொத்தத்தில் உலகிலேயே குழந்தைகள் வாழத் தகுதியற்ற நாடாகத்தான் இந்தியா உள்ளது.

தனது குழந்தைகளின் நலனைக் கூடக் காக்க இயலாத இந்தியாதான் உலகின் மூன்றாவது பெரிய ராணுவத்தையும், நான்காவது வலிமையான கப்பல் படையையும் கொண்டுள்ளது. சொந்த நாட்டில் குழந்தைகளின் உடல் வளர்ச்சியைக் கூட உத்திரவாதப்படுத்த வக்கில்லாதவர்கள், விஞ்ஞானத்தை வளர்த்து ராக்கெட் விட்டு சந்திரனைப் பிடிக்கப் போகிறார்களாம்!






இந்திய அரசு வறுமையை அளவிடக் கையாளும் முறையோ வக்கிரமானது. நகரத்தில் ஒருவர் மாதம் 538 ரூபாய் சம்பாதித்தாலே, அதாவது மூன்று வேளை ஒருவரால் தேநீர் மட்டும் குடிக்க முடிந்தாலே அவர் வறுமைக் கோட்டை கடந்துவிட்டார் என்று வரையறுத்துள்ளது. இந்த அளவை பல வருடங்களாக மாற்றாமலேயே வைத்திருந்துவிட்டு, வறுமை குறைந்துவிட்டது என்று இதுவரை கதையளந்து வந்துள்ளனர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தத் தெரிந்தவர்களுக்கு மக்களின் வாழ்நிலையை உயர்த்தும் வழிதெரியவில்லை.

கழுதை தேய்ந்து தேய்ந்து கட்டெறும்பான கதையாக, வறுமையில் ஆப்பிரிக்காவை விட மோசமான நிலையை இந்தியா இன்று அடைந்துள்ளது. அதேநேரத்தில் உலகப் பெருமுதலாளிகளின் வரிசையில் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளும் அணிவகுத்து நிற்கும் அளவுக்கு அவர்களது சொத்துக்களும் பூதாகரமாக வளர்ந்துள்ளன. இதுதான் நாட்டின் 'வளர்ச்சி' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தனியார்மய-தாராளமய-உலகமயமாக்கத்தின் மகிமை!

• கதிர்

**PUTHIYA JANANAYAGAM** (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: **42648/85**
Regd. No: **TN/CC(S)Dn/190/09-11** Licenced to Post without pre-payment WPP No: **TN/PMG/CCR/WPP-562/09-11**







# போபால்


நச்சுவாயுப் படுகொலை:

## நீதி வேண்டுமா? புரட்சி ஒன்றுதான் பாதை!











கொலைகார **'டௌ'**-வே வெளியேறு!

# முற்றுகை

**ஆகஸ்டு-15**

டௌ கெமிக்கல்ஸ் அலுவலகம், கிண்டி, சென்னை

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**